தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வேலூரில் 106 டிகிரி வெயில்

**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் ஞாயிற்றுக்கிழமை 106 டிகிரி வெயில் பதிவானது.

இதேபோல, தருமபுரி, கரூர் பரமத்தி, மதுரை, பாளையங்கோட்டை, சேலம், திருச்சி ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவாகியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):

வேலூர் - 106, மதுரை - 104, கரூர் பரமத்தி, சேலம், திருச்சி - 103, தருமபுரி - 102, பாளையங்கோட்டை - 100, சென்னை - 98, கோவை - 95, கொடைக்கானல் - 71.

## கோடையால் இளநீர், எலுமிச்சை விலை அதிகரிப்பு

**சென்னை,**

கோடை காலத்தை முன்னிட்டு தாகத்தை தீர்க்கும் இளநீர், எலுமிச்சை ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளது.

தமிழகம் முழுவதும் கோடை காலத்தினால் வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. சமீபகாலங்களில் சென்னையில் கோடை வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளது. இதனையொட்டி பொதுமக்கள் உடல் குளிர்ச்சிக்காக இளநீரை அதிகமாக வாங்கி அருந்துகின்றனர்.

உடல் புத்துணர்ச்சியைத் தரும் எலுமிச்சை பழங்களை பழ ரசத்துக்காக அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். கோடை காலத்தின் காரணமாகவும், வரத்து குறைவின் காரணமாகவும் இவற்றின் விலை அதிகரித்துள்ளது.

இது குறித்து அம்பத்தூர் இளநீர் வியாபாரி வி.ராஜு கூறியது: சென்னையில் விற்கப்படும் இளநீர் பெரும்பாலும் தமிழகத்தில் உள்ள பொள்ளாச்சி, திருப்பாச்சி மற்றும் புதுச்சேரியை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து விற்பனைக்கு வருகிறது.

குறைந்த அளவில் கேரளத்திலிருந்தும் வருகிறது. பொள்ளாச்சி இளநீர் பெரிதாகவும், சுவையாகவும் இருக்கும். திருப்பாச்சி இளநீர் நடுத்தர அளவிலும், புதுச்சேரி இளநீர் சிறிய அளவிலும் இருக்கும்.

சாதாரணமாக ஏப்ரல், மே மாதங்களில் இளநீர் விலை அதிகரித்து காணப்படும். ஆனால் இந்த ஆண்டு மார்ச் முதலே விலையேற்றம் காணப்பட்டது. தற்போது இது அதிகரித்துள்ளது. இந்த விலை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றார் ராஜு.

**இளநீர் விலை விவரம் (அடைப்புக்குறிக்குள் பழைய விலை):**

பொள்ளாச்சி இளநீர்:

(பெரியது) - ரூ.45 (35)

(சிறியது) - ரூ.35 (30)

திருப்பாச்சி இளநீர்:

(பெரியது) - ரூ.35 (30)

(சிறியது) - ரூ.30 (25)

புதுச்சேரி இளநீர்:

(பெரியது) - ரூ.25 (20)

(சிறியது) - ரூ.20 (15)

எலுமிச்சை பழங்கள் குறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் காய்கறி விற்பனையாளர்கள் சங்கத் தலைவர் சந்திரன் மற்றும் சில்லறை வியாபாரி அன்புதாசன் ஆகியோர் கூறியது:

எலுமிச்சை பழங்கள் பெரும்பாலும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த கூடூர், கனிகிரி, ராஜம்பேட்டை, கோடூர் ஆகிய பகுதிகளிலிருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வருகிறது. ஏப்ரல் - மே மாதங்களில் இந்த பகுதியில் எலுமிச்சை விளைச்சல் குறைவாகவே இருக்கும். ஆகவே இந்த பகுதியிலிருந்து நாள் ஒன்றுக்கு 5 முதல் 8

லோடு வரை வந்த எலுமிச்சை பழங்கள், தற்போது 3 முதல் 4 லோடுகள் மட்டுமே வருகின்றன. தமிழகத்தில் புளியங்குடி, சங்கரன்கோயில் ஆகிய பகுதிகளில் விளையும் எலுமிச்சை பழங்கள் அருகிலுள்ள திருச்சி, மதுரை, ஒட்டன்சத்திரம், ஆகிய சந்தைகளுக்கு சென்றுவிடுவதால், கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரும் தமிழக எலுமிச்சை பழங்களின் வரத்து மிகக் குறைவே.

தற்போது கோடை வெப்பத்தின் காரணமாக பொதுமக்கள் மற்றும் பழச்சாறு கடைகளைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் எலுமிச்சை பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் தேவை அதிகரித்துள்ளது. அதே சமயம் வரத்தும் குறைந்துள்ளதால் விலை அதிகரித்து காணப்படுகிறது. கோடை காலம் முடியும் வரை இந்த விலையேற்றம் நீடிக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

**எலுமிச்சை பழங்கள் விலை நிலவரம் (அடைப்புக்குறிக்குள் ஒரு மாதத்துக்கு முன்பு இருந்த விலை):**

1 கிலோ எலுமிச்சை பழம் (சுமார் 20 பழங்கள்)

பெரியது: ரூ.100 (60)

சிறியது: ரூ.80 (50)

## இயற்கை விவசாயத்தின் பலன்கள்: ராணிப்பேட்டை விவசாயிகள் ஆர்வம்

**திருவள்ளூர்,**

திருவள்ளூர் அருகே 100 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள இயற்கை வேளாண் பண்ணையில் விவசாயப் பலன்களைக் காண வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டையைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் கண்டு சென்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டத்துக்கு உள்பட்ட காவேரி ராசபுரம் கிராமத்தில் திருநின்றவூரைச் சேர்ந்த பாரதி என்பவர் 100 ஏக்கருக்கும் மேல் உள்ள நிலத்தில் இயற்கை வேளாண் பண்ணை அமைத்து பராமரித்து வருகிறார்.

இவரது தோட்டத்தில் மா, பலா, வாழை, தென்னை, கொய்யா, நெல்லிக்காய், நெற்பயிர் உள்ளிட்ட பல வகையான பயிர்களை வளர்த்து வருகிறார்.

இதில் சிறப்பம்சம் என்னவென்றால் இவை அனைத்தும் இயற்கை உரத்தால் மட்டுமே பராமரிக்கப்பட்டு வருவதுதான்.

மேலும் ஆள்பற்றாக்குறை காரணமாக தனது பண்ணையில் பல இடங்களில் நவீன சுழல் கேமராக்களை பொருத்தி அதன் மூலம் தோட்டத்தின் பகுதிகளில் மரம், செடி, கொடிகளில் வரும் குறைபாடுகளை கண்டறிந்து அந்த இடத்துக்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்து வருகிறார். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டையைச் சேர்ந்த விவசாயிகள் 100-க்கும் மேற்பட்டோர் தங்களது குடும்பத்துடன் காவேரி ராசபுரத்துக்கு வந்து பாரதியின் தோட்டத்தைப் பார்வையிட்டனர்.

இதுகுறித்து ராணிப்பேட்டை மாங்காடு உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் கே.எம்.பாலு கூறியது:

நான் 15 வயது முதல் விவசாயம் செய்து வருகிறேன்.

அதில் 30 ஆண்டுகள் செயற்கை ரசாயன உரத்தை நம்பி விவசாயம் செய்ததால் எனது நிலத்தில் (மண்) மலட்டுத் தன்மை ஏற்பட்டது. உணவுகளும் சத்தில்லாத உணவாகவும், நச்சுத் தன்மை கொண்டதாகவும் மாறியது.

இதையடுத்து கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் பாரதியின் தோட்டம் குறித்து அறிந்து அவரிடம் ஆலோசனையைக் கேட்டு அதன் பின்னர் முழுக்க முழுக்க இயற்கை விவசாயத்துக்கு மாறினேன்.

தற்போது அரிய ரகமான பூங்கார், ஆத்தூர் கிச்சடி, ஆற்காடு கிச்சடி போன்ற நெல் ரகங்களை பயிரிட்டு வருகிறேன்.

எங்கள் பகுதி விவசாயிகள் அனைவரும் இயற்கை விவசாயத்தின் பலன்களை அறிந்து அவர்களும் இயற்கை விவசாயத்தில் ஈடுபட வேண்டும் என அந்த விவசாயிகளை இங்கு அழைத்து வந்தேன் என்றார் அவர்.

வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை வட்டாரக் குழு உறுப்பினர் அசோலா பாலகிருஷ்ணன் கூறியது: பெரும்பாலான விவசாயிகளுக்கு இயற்கை உரத்தின்

பலன்கள் தெரிவதில்லை. இயற்கை உரத்தில் முக்கியமானது அசோலா உயிர் உரம்.

இது புரதச்சத்து மிகுந்த பாசி இனத்தைச் சேர்ந்தது.

இதை பயன்படுத்தும் போது செலவும் குறைவாகும்.

நான் இயற்கை உரத்தை பயன்படுத்தி அரிய வகை ரகமான மாப்பிள்ளை சம்மா, சீரகசம்பா, பூங்கார், அனுதாங்கூர், ஆத்தூர் கிச்சடி, மஞ்சள் பொன்னி உள்ளிட்ட ரகங்களை பயிரிட்டு வருகிறேன்.

எங்களது பகுதி விவசாயிகளுக்கும் இதுகுறித்து அறிந்து கொள்ள இங்கு அழைத்து வந்துள்ளேன் என்றார் அவர்.

பார்வையிட வந்தவர்களிடம் தோட்டத்தின் உரிமையாளர் பாரதி, அவரது மனைவி ரேவதி, மகள் வித்யாஸ்ரீ, மகன் முத்தமிழ்நாதன் ஆகியோர் இயற்கை விவசாயம் குறித்து விளக்கினர்.

## ஆண்டிபட்டியில் மல்லிகை பூ வரத்து அதிகரிப்பு: கிலோ ரூ.70-க்கு விற்பனை

**ஆண்டிபட்டி,**

ஆண்டிபட்டி பூ மார்க்கெட்டில் மல்லிகை பூ வரத்து அதிகரிப்பால், ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி கிலோ ரூ.70 விற்பனையானது. ஆண்டிபட்டி அருகே திம்மரசநாயக்கனூர், மரிக்குண்டு, கண்ணியப்பபிள்ளைபட்டி, தெப்பம்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மல்லிகை பூ, சம்பங்கி, கோழிக்கொண்டை மற்றும் ரோஜா, செண்டு பூ ஆகியவை பல நூறு ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளன.

இப்பகுதியில் கடந்த சில மாதங்களாக மழை இல்லாததால் பூ விளைச்சல் குறைவாக இருந்தது. இதனால் மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைவாக இருந்தது. இந்நிலையில் கடந்த சில நாள்களாக ஆண்டிபட்டி பகுதியில் மழை பெய்ய ஆரம்பித்தது. இதனால் பூக்கள் விளைச்சல் அதிகரித்தது. ஆண்டிபட்டி பூ மார்க்கெட்டுக்கு ஒரு நாளைக்கு 2000 கிலோ முதல் 6000 கிலோ வரை மல்லிகை பூ வரத்துவங்கியது. பூ வரத்து அதிகரித்ததால் விலை குறைந்து கிலோ 70 ரூபாய்க்கு

விற்பனையானது. மேலும் சம்பங்கி வரத்து அதிகரிப்பால் அதன் விலையும் குறைந்து கிலோ ரூ. 30-க்கு விற்பனையானது.

இதனால் ஏராளமான வியாபாரிகள் பூக்களை வாங்கிச் சென்றனர். மேலும் அதிகமான பூக்கள் வரத்தால் நிலக்கோட்டை மற்றும் மூணாறு பகுதிகளில் உள்ள சென்ட் தொழிற்சாலையை சேர்ந்தவர்கள் ஆண்டிபட்டியில் முகாமிட்டு ஏராளமான மல்லிகை பூக்களை வாங்கிச் சென்றனர்.

ஞாயிற்றுக்கிழமை மாலை பூக்களின் விலை நிலவரம்:

ரோஜா: ரூ.60, சம்பங்கி:ரூ.30, கோழிக்கொண்டை:ரூ.60, செண்டு பூ:ரூ.100

இது குறித்து வியாபாரி சக்திவேல் கூறியது:

கடந்த சித்திரை மாதம் முகூர்த்தம் கிடையாது. ஆனால் மல்லிகை பூ கிலோ ரூ.500 வரை விற்பனையானது. தற்போது வைகாசி மாதம் முகூர்த்தங்கள் துவங்கிவிட்டன. இந்நிலையில் மல்லிகை பூ கிலோ விலை குறைந்து ரூ.70க்கு விற்பனையாகிறது. இதனால் பூக்கள் பறிப்பதற்கு கூலிகூட கொடுக்கமுடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்றார்.

## அணைகளுக்கு நீர் வரத்து குறைவு: வெளியேற்றப்படும் அளவு குறைப்பு

**ஆண்டிபட்டி,**

முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளதால் அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன் முல்லைப் பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த தொடர் மழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. அதனையடுத்து வைகை அணைக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் மழை நின்றுவிட்டதால் அணைக்கு நீர் வரத்து 115 கன அடியாக குறைந்துள்ளது. இதையடுத்து வைகை அணைக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு 200 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதால் வைகை அணைக்கும் நீர் வரத்து குறைந்துள்ளது.

## போளுவாம்பட்டி வனப்பகுதியில் 25,000 நீர்த்தேக்க குழிகள் அமைப்பு

**கோவை,**

கோவை வனக்கோட்டத்திற்கு உள்பட்ட போளுவாம்பட்டி வனச்சரக பகுதியில் 25,000 நீர்த்தேக்க குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கோவை வனக்கோட்டத்தில் உள்ள 6 வனச்சரக பகுதிக்கு உள்பட்ட வனப்பகுதிகளில் நீர்த்தேக்க குழிகள் அமைத்து மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், போளுவாம்பட்டி வனச்சரக பகுதியில் சுமார் 25,000 நீர்த்தேக்க குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நீர்த்தேக்க குழிகளுக்கு அருகே மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. நபார்டு திட்டத்தில் 25,000 மரக்கன்றுகள் நடப்பட்டு, நீர்தேக்க குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மழைக் காலங்களில் நீரை சேமிக்கும் வகையில் மரக்கன்றுகளுக்கு கீழே நீர்த்தேக்க குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் பெய்த மழையால் நீர்த்தேக்கக் குழிகள் அனைத்தும் நிரம்பியுள்ளன. கோடை வெயில் இருந்தாலும் மரங்களுக்கு போதிய நீர் கிடைக்கும் என வனத்துறையினர் தெரிவித்தனர்.

அதேபோல நரசிபுரத்தை அடுத்த தாணிகண்டி வனப்பகுதியில் வன விலங்குகளின் தாகம் தீர்க்க தண்ணீர் தொட்டி கட்டப்பட்டுள்ளது. யானைகள் உள்ளிட்ட பெரிய வனவிலங்குகளுக்கு பெரிய தொட்டியும், மான்கள் உள்ளிட்ட பிற விலங்குகளுக்கு சிறிய தொட்டியும் புதிய வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளன.

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால், சமீபத்தில் கோவையையொட்டிய மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நல்ல மழை பெய்தது. இதில் போளுவாம்பட்டி வனச்சரகப் பகுதியில் உள்ள 5 கசிவுநீர் குட்டைகள், 10 தடுப்பணைகள் நிரம்பியுள்ளன.

கடந்த ஆண்டில் கோடை காலத்தில் வன விலங்குகள் தொண்டாமுத்தூர் பகுதியையொட்டிய கிராமங்களில் புகுந்து தொந்தரவு செய்து வந்தன.

இந்த ஆண்டில் கோடை காலத்தில் நல்ல மழை பெய்துள்ளதாலும் நீர் ஆதாரங்களில் போதிய அளவுக்கு தண்ணீர் இருப்பதாலும் வன விலங்குகள் தொந்தரவு குறைந்துள்ளது.

## ரூ.48 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**தாராபுரம்,**

மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ.48 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

பிரதி வாரம் சனிக்கிழமை நடைபெறும் இந்த ஏலத்தில் மூலனூர் வேளாம்பூண்டி, சின்னமருதூர், கிளாங்குண்டல், வடுகபப்பட்டி, பொன்னிவாடி உள்பட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதை அன்னூர், திருப்பூர், மேட்டுப்பாளையம், பல்லடம், கோவை போன்ற பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ஆர்.சி.எச்.முதல்ரக பருத்தி குவிண்டால் அதிகபட்ச விலையாக ரூ.5,820-க்கும் குறைந்தபட்ச விலையாக ரூ.4,500-க்கும் விற்பனையானது. இந்த வாரம் மொத்தம் 2,800 பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு வந்திருந்தன. இதன் மதிப்பு ரூ.48 லட்சம். கடந்த வாரத்தை விட மூட்டைக்கு ரூ.100 அதிக விலை கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஏலத்திற்கான ஏற்பாடுகளை ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளார் மகுடேஸ்வரன் செய்திருந்தார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 44.95 அடி

**ஈரோடு,**

First Published : 18 May 2014 05:38 AM IST

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 44.95 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 102 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை.

அணையில் நீர்இருப்பு 3.3 டி.எம்.சி.

## <u>கோடை உழவுக்கு தயாராக வேளாண்துறை அழைப்பு</u>

**காரைக்கால்,**

காரைக்காலில் அண்மையில் பெய்த மழையை பயன்படுத்தி கோடை உழவுக்கு தயாராகுமாறு விவசாயிகளுக்கு வேண்டுமென வேளாண் துறை அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோடை உழவு செய்வதால் மண்ணின் இறுக்கம் நீக்கப்பட்டு, நீர் பிடிப்புத் திறன் 20 சதம் வரை அதிகரிப்பால் விளைச்சல் உயர வாய்ப்பிருக்கிறது. மண் பொல பொலத்துப் போவதால் பயிர்கள் நன்கு வேர்விட்டு வளர்ந்து வறட்சியை தாங்கும் தன்மை அடைகிறது. மண்ணுக்குள் காற்றும், நீரும் எளிதாக ஊடுருவி செல்வதால் பயிர்கள் ஆழமாக மண்ணுக்குள் ஊடுருவி பரவுகிறது. இதனால் பயிர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துகள் எளிதில் கிடைக்கிறது.

சாகுபடி செய்ய உள்ள நிலத்தில் உள்ள களைச் செடிகள் அழிக்கப்படுவதால் களைகள் பெருமளவு கட்டுப்படுத்தப்படுகிறது. பயிர்களை தாக்கும் பூச்சி, புழுக்கள் மற்றும் நோய் காரணிகள் மண்ணுக்குள் இருந்து வெளிக்கொணரப்பட்டு சூரிய வெப்பத்தினால் அழிக்கப்படுகிறது.

கோடை உழவின் மூலம் மண்ணின் வளம் பாதுகாக்கப்படுவதுடன் தக்க பருவதில் விதைக்க நிலத்தை தயார் செய்வது எளிதாகிறது. நெல் சாகுபடியில் நடவு வயலை தயார் செய்வதற்கு தேவைப்படும் பாசன நீரின் அளவு 20 முதல் 30 சதவீதம் அளவு குறைய வாய்ப்புள்ளது. எனவே காரைக்கால் விவசாயிகள் கோடை உழவு செய்ய முன்வரவேண்டும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சென்னையில் வெப்பம் குறைந்தது: தமிழகத்தில் ஆங்காங்கே மழை

சென்னை: கடல் காற்றின் திசை மற்றும் வேகம் மாறியதால், சென்னையில் கடந்த இரு தினங்களாக, வெப்ப நிலை குறையத் துவங்கி உள்ளது. வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கடந்த, ஆறு நாட்களுக்கு முன் வரை, தமிழகத்தின் பல பகுதிகளில் மழை பெய்தது. அதன் பின், தமிழகம் முழுவதும் வெப்பநிலை உயரத் துவங்கியது.

42 டிகிரி செல்சியஸ் : வெப்பச்சலனம் காரணமாக, தற்போதும், தெற்கு மற்றும் மேற்கு தமிழக பகுதிகளில், ஆங்காங்கே, லேசானது முதல், மிதமான மழை பெய்து வருகிறது. அதே நேரம், மத்திய தமிழகம் மற்றும் சென்னை உட்பட, வட தமிழகத்தின் பல பகுதிகளில், வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வந்தது. அதிகபட்சமாக, நேற்று முன்தினம் காலை நிலவரப்படி, சென்னையில், நகரம் மற்றும் விமான நிலையப் பகுதிகளில், 42 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியது. அதே போல், திருத்தணி, வேலூரிலும், 42 டிகிரி வெப்பம் பதிவாகியது. சென்னையில், இயல்பளவை விட, 5 டிகிரி வெப்பம் உயர்ந்ததால், பொதுமக்கள் மிகுந்த இன்னலுக்கு உள்ளாகினர். இந்நிலையில், நேற்று காலை, வெப்பநிலை குறைந்தது.

நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக, திருச்சி, திருத்தணியில், 41 டிகிரி வெப்பம் பதிவாகியது. சென்னையில், நகரில், 37, விமான நிலையம், 38 டிகிரி பதிவாகியது. தொடர்ந்து, வெப்பநிலை உயர்ந்திருந்த பல பகுதிகளிலும், சற்றே அனல் தணிந்துள்ளது.

தணிந்தது : சென்னையில், நேற்று காலை முதலே, வெப்பநிலை தொடர்ந்து குறைந்து வருகிறது. காலையில் அனலின் தாக்கம் வெகுவாகக் குறைந்து, மந்தமான சூழல் நிலவியது. நேற்று பகல், 2:00 மணி நிலவரப்படி, நகரில், 34 டிகிரி மட்டுமே பதிவாகியது. அடுத்த, 48 மணி நேரத்திற்கு, வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும்; வெப்ப நிலை அதிகபட்சம், 35; குறைந்தபட்சம், 29

டிகிரியாக பதிவாகும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வானிலை மாற்றம் குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறுகை யில், "காற்று, மேற்கு நோக்கி வலுவாக வீசியதால், வெப்பநிலை அதிகரித்தது. தற்போது, கடல் காற்று நன்றாக வீசுவதால், காற்றில் ஈரப்பதம் அதிகரித்து, வெப்பநிலை குறைந்துள்ளது' என்றார்.

ஒரு புறம் வெப்பம் அதிகரித்த நிலையில், மற்றொரு புறம் மழையும் பெய்து வருகிறது.

மழையும் உண்டு : நேற்று காலை நிலவரப்படி, கிருஷ்ணகிரி - ஓசூர், தேன்கனிக்கோட்டை; விழுப்புரம் - சங்கராபுரம்; சேலம் - ஓமலூர், 2; கிருஷ்ணகிரி - சூளகிரி, போச்சம்பள்ளி; சேலம் - வாழப்பாடி; நாமக்கல் - மங்களாபுரம்; விழுப்புரம் - திருக்கோவிலூரில் 1 செ.மீ., மழையும் பதிவாகியுள்ளது. இந்நிலையில், மேலும், நாளை, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், நாளை மறுதினம், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், ஓரிரு இடங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

ஜூன் 5ல் தென்மேற்கு பருவமழை : அதிக மழைப் பொழிவைத் தரும் தென் மேற்கு பருவமழை காலம், ஜூன் முதல், செப்டம்பர் வரை. ஆனால், தென் மேற்கு பருவமழை, பொதுவாக, மே மாதம், 20ம் தேதியே துவங்கி விடும். இம்முறை, சற்று முன்னதாகவே, அந்தமான் பகுதியில் துவங்கியுள்ளது.

வழக்கமாக, ஜூன் 1ம் தேதி முதல், கேரளாவில் மழைப் பொழிவு ஆரம்பிக்கும். இந்தாண்டு, சற்றே தள்ளி, 5ம் தேதி துவங்க வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த மழை மூலம், தமிழகத்திற்கு ஓரளவு மழை கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

## விருத்தாசலத்தில் இளநீர் விலை விர்ர்...

**விருத்தாசலம்**: விருத்தாசலத்தில் இளநீர் தட்டுப்பாட்டால் விலை உயர்ந்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் கடந்த 2011ல் வீசிய "தானே' புயலில், கடலூர், விருத்தாசலம், சிதம்பரம், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி பகுதிகளில் இருந்த பெரும்பாலான தென்னை மரங்கள் சேதமடைந்தன. அதில் எஞ்சிய தென்னை மரங்களை விவசாயிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக பராமரித்து வருகின்றனர்.

மாவட்டத்தில் போதிய மழையின்றி கடும் வறட்சி நிலவியதால் தென்னையில் காய்ப்பு குறைந்தது. இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் முதல் வெயிலின் உஷ்ணம் மக்களை வாட்டி வதைத்து வருவதால், இளநீர் விற்பனை சூடுபிடித்தது.
அதே சமயத்தில் காய்ப்பு குறைந்ததால் இளநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. கடந்த மாதம் இளநீர் 15 ரூபாய் வரை விற்றது. கடந்த வாரம் அக்னி நட்சத்திரம் துவக்கத்தில் தொடர் மழை பெய்ததால், விற்பனை "டல்' அடித்தது. தற்போது வெயில் சுட்டெரித்து வருவதால், இளநீர் விற்பனை சூடு பிடித்ததோடு, விலை 20 ரூபாயாக உயர்ந்துள்ளது. இளநீர் வியாபாரி ஒருவர் கூறுகையில், "கடந்தாண்டு கடுமையான வறட்சியால் தென்னை மரங்களில் காய்ப்பு குறைந்தது. தற்போது, இளநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், விலை அதிகரித்துள்ளது' என்றார்.

## "வாழைமரத்தை பாதுகாத்து பராமரிக்கணும்' : தேசிய வாழை ஆராய்ச்சி மையம் "அட்வைஸ்'

**திருச்சி**: ""கோடை மழை பாதிப்பில் இருந்து வாழை மரங்களை பாதுகாத்து பராமரிக்கும் முறைகளை கவனமாக விவசாயிகள் பின்பற்ற வேண்டும். தவறினால் மகசூல் பாதிக்கும்," என்று திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையம் இயக்குனர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:
தற்போது பெய்துவரும் கோடை மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்தள்ளது. இருப்பினும் இந்த மழையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து வாழை விவசாயிகள் அறிந்து, அதற்கேற்ப பின்செய் நேர்த்திகளை செய்ய வேண்டியது அவசியம்.
வாழையின் சீரான வளர்ச்சிக்கும், மகசூலுக்கும் நீர்ப்பாசனம் எவ்வளவு முக்கியமோ, அதே போன்று வாழைத்தோட்டங்களில் தேங்கியுள்ள அளவுக்கதிகமான நீரை வெளியேற்றுவதும் அவசியம். அதற்குரிய வடிகால் வசதிகள் அமைப்பதும் அவசியம்.
தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் வெள்ள நீராக இருந்தால் அதிகபட்சமாக 72 மணி நேரமும், தேங்கியுள்ள வெள்ள நீராக இருந்தால் 24 மணி முதல் 48 மணி நேரமும் இருக்கலாம். அதற்கு மேல் தண்ணீர் வாழை தோட்டங்களில் தேங்கினால் வாழை தாக்கு பிடிக்காது.

குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் வாழை தோட்டங்களில் தேங்கியுள்ள நீரை வடியச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யாமல் விட்டால், வாழையின் வேர்கள் பாதிப்படைந்து, வாழையில் வளர்ச்சி மற்றும் மகசூல் பாதிக்கும்.

பழங்களின் தரமும், வெகுவாக பாதிக்கும். ஏனென்றால் வேர்களைச் சுற்றி தொடர்ந்து நீர் தேங்கியிருக்கும் போது மண்ணில் வேர்கள் சுவாசிக்கத் தேவையான காற்றின் அளவு குறைந்து, வேர்கள் பாதிக்கப்படும். இதன் காரணமாக செடிகளுக்குத் தேவையான நீர் உள்ளிட்ட மற்ற ஊட்டச்சத்துக்கள் மண்ணில் இருந்து உறிஞ்சப்படுவது தடைபடும்.

எனவே, நீர் தேங்கியுள்ள தோட்டத்தில் வாழை மரங்களின் இலைகள் மஞ்சள் நிறத்துக்கு மாற்றமடைந்து, இலைகள் பழுக்கத் துவங்கும். வேர்கள் பாதிக்கப்படுவதால் மண்ணில் உள்ள நூற்புழுக்கள் மற்றும் வாடல் நோயை உண்டாக்கும் பூஞ்சாணங்கள் வேர்கள் வாயிலாக வாழை மரத்தை பாதிக்க வழி வகுக்கும்.

இந்த நேரத்தில் வீசக்கூடிய லேசான காற்றுக்கே வாழை மரம் வேரோடு சாயும் அபாயம் ஏற்படும். தார் என்ற மரங்களில் காய்கள் திரண்டு வளராமல் சிறியதாகும். எனவே, இழப்புகளை தவிர்க்க வாழைத் தோட்டங்களில் நீர் தேங்காதபடி நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும். உடன் தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும்.

அதோடு மழை நீரில் கரைந்து வெளியேறிய உரங்கள் மற்றும் நின்றவுடன், பொட்டாசியம் நைட்ரேட் உரத்தை லிட்டருக்கு 10 கிராம் என்ற அளவில் கரைத்து அதோடு நல்ல தரமான ஒட்டுந்திரவத்தை ஒரு டேங்கிற்கு 5 மி.லி., என்ற அளவில் கலந்து மரம் முழுவதும் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

தேவைப்பட்டால், 2 முதல் 3 வாரங்கள் கழித்து, மீண்டும் ஒருமுறை அதே அளவில் பொட்டாசியம் நைட்ரேட் உரக்கரைசலை மரம் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும்.

இவ்வாறு செய்தால் வெள்ள நீரால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து வாழை மரங்கள் மீண்டும் மரங்கள் சீராக வளரும். நன்கு நீர் வடிந்த பிறகு, மண்ணில் காற்றோட்ட வசதி ஏற்பட, வாழை மரங்களை சுற்றி மண்மை வேர்கள் பாதிக்காதவாறு கிளறி விடுவதன் மூலம், மண்ணில் காற்றோட்ட வசதி அதிகரித்து வேர்கள் சுவாசிக்கவும், புதிய வேர்கள் உற்பத்தியாகவும் உதவும்.

மழைநீர் முழுவதும் வடிந்த பின்னர் மரங்களைச் சுற்றி இரண்டு முதல் மூன்றடி தூரத்தில் வட்ட வடிவில் கிண்ணம் பறித்து, மரம் ஒன்றுக்கு 150 கிராம் யூரியா, 100 கிராம் மூயேட் ஆப்பொட்டாஷ் உரங்களை இட்டு மண்ணுடன் கலந்து, மூடி, நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

விவசாயிகள் இந்த முறைகளை கையாண்டு வாழை தோட்டங்களில் நல்ல வடிகால் வசதி ஏற்படுத்தி தேங்கியுள்ள நீரை வெளியேற்றியும், உரக்கரைசலை தெளித்தும், நன்கு பராமரித்து பயனடையலாம். இதுகுறித்த தகவல்களை அறிய இயக்குனர், தேசிய வாழை ஆராய்ச்சி மையம், தோகைமலை ரோடு, தாயனூர் அஞ்சல், திருச்சி-620 102 என்ற முகவரியிலோ அல்லது 0431-2618106, 98426 35630 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடும் வெயில் எதிரொலி: ரோஜா உற்பத்தி பாதிப்பு

**ஓசூர்**: ஓசூரில், கடும் வெயில் காரணமாக, ஏற்றுமதிக்கு தரமான ரோஜாவை சாகுபடி செய்ய முடியவில்லை என, விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

ஓசூர், பேரிகை, பாகலூர், கெலமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில், ரோஜாக்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து, பெங்களூரு கொண்டு செல்லப்படும் ஏற்றுமதி தரம் வாய்ந்த ரோஜாக்கள், பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா, நியூசிலாந்து மற்றும் அரேபிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

ஓசூர் ரோஜாக்களுக்கு, உள்ளூர் சந்தையில், ஆண்டில், நான்கு மாதங்கள் மட்டுமே, தேவை அதிகமாக இருப்பதால், ஏற்றுமதி தரம் வாய்ந்த ரோஜாக்களை சாகுபடி செய்யவே, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மலர் உற்பத்தியில், முதலிடத்தில் உள்ள சீனா, எத்தோப்பியா போன்ற நாடுகளில், ரோஜா தேவை அதிகரித்துள்ளதால், அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் ரோஜாக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதனால், கடந்த ஃபிப்ரவரி மாத துவக்கத்தில் இருந்தே, ஓசூர் ரோஜாக்களுக்கு, நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

மேலும், ரோஜாக்களுக்கு, அதிக விலை கிடைத்ததால், ஓசூரில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் ரோஜாக்களின் அளவும் அதிகரித்தது. இந்நிலையில், கடந்த மாதம் பல்வேறு காரணங்களால், ரோஜாக்களின் விலை, தாறுமாறாக குறைந்தது. ஒரு ரோஜாப்பூ, ஒரு ரூபாய்க்கு கூட விற்பனையாகவில்லை.

இந்நிலையில், தற்போது, ஓசூரில் கடும் வெயில் காரணமாக, ஏற்றுமதிக்கு தரம் வாய்ந்த ரோஜாக்களை சாகுபடி செய்ய முடியாத நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால், பசுமை குடில்களுக்குள் நின்று வேலை செய்ய முடியவில்லை என, விவசாயிகள், வேதனையுடன் தெரிவித்தனர்.

ஓசூர் விவசாயி சிவா கூறியதாவது:

ஓசூரில், கடந்த காலங்களில் இல்லாத அளவுக்கு, கடும் வெயில் கொளுத்தி வருவதால், ஏற்றுமதி தரம் வாய்ந்த ரோஜாக்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. பொதுவாக, ஐந்து முதல் ஆறு செ.மீ., உள்ள ரோஜா மொட்டுகளை மட்டும் தான், ஏற்றுமதி செய்ய முடியும். ஆனால், தற்போது கடும் வெயில் எதிரொலியாக, ரோஜா மொட்டுக்கள், செடிகளிலேயே காய்ந்து வருகிறது. இவ்வாறு கூறினார்.

## மேட்டூரில் கிணறுகளை ஆழப்படுத்தும் விவசாயிகள்

**மேட்டூர்**: மேட்டூர் அணை நீர்மட்டம், 35 அடியாக சரிந்ததால், மேட்டூர் அணை நீர்பரப்பு பகுதியில் வறண்டு போன கிணறுகளை, விவசாயிகள் ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேட்டூர் அணை, 152 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது. அணையின் மொத்த நீர்மட்டம், 120 அடியாகும். மேட்டூர் அணையில் தற்போது, 50 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியில் மட்டுமே தண்ணீர் தேங்கியுள்ளது. மீதமுள்ள, 100 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதி வறண்டு கிடக்கிறது.

மேட்டூர் அணை கட்டுவதற்கு முன்பு, நீர்பரப்பு பகுதியில், 100க்கும் மேற்பட்ட கிணறுகள் இருந்தது. அணை கட்டிய பின், நீர்மட்டம், 120 அடியை எட்டும் போது, கிணறுகள் நீருக்குள் மூழ்கி விடும். தற்போது, நீர்மட்டம் குறைவாக இருப்பதால், கிணறுகள் வெளியில் தெரிகிறது.

கிணற்றில் உள்ள நீரை பயன்படுத்தி, அணை வறண்ட நீர்பரப்பு பகுதியில் விவசாயிகள் எள், பருத்தி, மிளகாய் சாகுபடி செய்துள்ளனர். மேட்டூர் அணை நீர்மட்டம், 35 அடியாக சரிந்து விட்டதாலும், கடும் வறட்சியாலும் மேட்டூர் அணை நீர்பரப்பு பகுதியில் உள்ள கிணறுகளும் வறண்டு விட்டது. சாகுபடி செய்த பயிர்களை காப்பாற்றவும், புதிதாக பயிர் சாகுபடி செய்வதற்காகவும் விவசாயிகள் வறண்ட கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**சித்திரை பருவத்தில் பொன்னி அரிசி விலை உயர்வு : குண்டு ரகம் வாங்க இது நல்ல தருணம்**

**ஆர்.கே.பேட்டை:** தை மாதத்தை தொடர்ந்து, அரிசிக்கு இது இரண்டாம் பருவம். இதில், அரிசி விலை சராசரியாக, மூட்டைக்கு, 200 ரூபாய் உயர்ந்து உள்ளது. குண்டு ரகம், நெல் விலை கூடுதலாகவும், அரிசி விலை குறைவாகவும் விற்பனை ஆகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில், உள்ளூர் விளைச்சலை விட, ஆந்திர மாநில அரிசி, அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது. இருந்தாலும், குண்டு மற்றும் பொன்னி அரிசிக்கு, உள்ளூர் விளைச்சலை தான் மக்கள் அதிகம் விரும்புகின்றனர். தை மாதம் அறுவடை செய்யப்படும் பொன்னி, முதல் தரமானது. இரண்டாம் தரமாக, சித்திரை மாதம் அறுவடை செய்யும் பொன்னி உள்ளது. தை மாதத்தில் வாங்கி இருப்பு வைக்க தவறியவர்களும், குறைவாக இருப்பு வைத்தவர்களும் தற்போது வாங்குகின்றனர். தை மாதத்தில், உள்ளூர் பொன்னி அரிசி, 100 கிலோ, 4,200 ரூபாய்க்கும், ஆந்திராவின் சோனா மற்றும் களம்பூர் பொன்னி, 4,800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. பொன்னி விலை உயர்வு சித்திரை பொன்னி, இரண் டாம் தரம் என்பதால், தை மாதம் விற்பனை செய்யப்பட்ட அதே விலையில், தற்போது விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், சூப்பர் பொன்னி (ஏ.டி.டி. 43, 45), சிவப்பு பொன்னி (ஏ.டி.டி 39), குண்டு ரக அரிசி தற்போது விலை உயர்ந்து உள்ளது. தை மாதம் விற்பனை ஆன விலையை விட, 100 கிலோவுக்கு, 200 ரூபாய் வரை சராசரியாக உயர்ந்து உள்ளது. இதுகுறித்து, ஆர்.கே.பேட்டையைச் சேர்ந்த அரிசி வியாபாரி சரவணன் கூறுகையில், 'உள்ளூர் மற்றும் ஆந்திர மாநிலம், காளஹஸ்தி பகுதியில் இருந்து நெல் வரத்து குறைந்து உள்ளது. தேவை அதிகமாக இருப்பதால், விலையேற்றம் உள்ளது. கார்த்திகை மாதம் மூன்றாம் போகம் அறுவடைக்கு பின், வரத்து அதிகரிக்கும். அதுவரை அதே நிலையில் நீடிக்கும்' என்றார்.

நெல் வியாபாரி தண்டபாணி கூறுகையில், 'குண்டு ரக நெல் தற்போது ஒரு குவிண்டால் (100 கிலோ) 1,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், பழைய குண்டு அரிசி, கிலோ, 24 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. அடுத்த சில நாட்களில், புது நெல், அரிசியாக விற்பனைக்கு வரும்போது, இது, 28 முதல் 30 வரை உயரும்' என்றார்.

விலை கிலோ

அரிசி ரகம் தை மாதம் சித்திரை மாதம்

குண்டு (ஏ.டி.டி., 37) 26 24

பாபட்லா (ஆந்திரா) 32 36

சோனா மசூரா (ஆந்திரா)32 36

சூப்பர் பொன்னி (ஏ.டி.டி.

43, 45), 28 30

சிவப்பு பொன்னி

(ஏ.டி.டி. 39) 24 26

பொன்னி 40 42

## மயிலத்தில் உழவுப் பணி

**மயிலம்**: மயிலம் பகுதி விவசாயிகள் உழவுப் பணிகளை தீவி ரமாக செய்து வருகின்றனர். சித்திரை மாதத்தில் சில நாட்களாக மயிலம் பகுதியில்,பல இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. இந்த ஈரத்தை பயன் படுத்தி விவசாயிகள் டிராக்டர்கள் மூலம் உழவுப் பணிகளை தீவிரமாக செய்து வருகின்றனர். நிலத்திற்கு தொழுவுரம் இட்டு சமன் படுத்திய பின்னர் நடப்பு சித்திரைப் பட்டத்தில் எள், சூரிய காந்தி போன்ற பயிர்களை மான வாரியாக விதைக்க உள்ளனர். ஒரு சில விவசாயிகள் ஜூன், ஜூலை மாதத்தில் மனாவாரியாக மணிலா பயிரிடவும் நிலத்தை தயார் செய்து வருகின்றனர்.

## சங்கராபுரம் பகுதி விவசாயிகள் கீரை சாகுபடியில் அதிக ஆர்வம்

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதியில் கீரை சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சங்கராபுரம் பகுதியில் கடந்த இரு ஆண்டுகளாகபோதிய மழை இல்லாததால் ஏரி,குளங்கள் போன்ற நீர் நிலைகள் வறண்டன. கிணறுகளில் நீர் மட்டம் குறைந்ததால், விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்காமல், விவசாயிகள் பயிர் செய்யாமல் நிலத்தை கரம்பாகவே போட்டு வைத்துள்ளனர். கிணற்றில் உள்ள குறைந்த அளவு தண்ணீரை கொண்டு, அதிக தண்ணீர் செலவில்லாத கீரை சாகுபடியில் விவசாயிகள், தற்போது ஆர்வம் காட்டி

வருகின்றனர். சங்கராபுரம் அடுத்த பொய்குனம், நெடுமானூர் காட்டுகொட்டாய், காட்டுவனஞ்சூர், சேமபாளையம், செட்டியந்தூர், ஆரூர் உள்ளிட்ட கிராமங்களில் சிறுகீரை, அரை கீரை, முளை கீரை, புளிச்சக்கீரை, வெந்தயக் கீரை, பொன்னாங்கன்னி கீரை, பாளைகீரை, கரிசலாங்கன்னி கீரை, அகத்திகீரை, ஆகிய கீரை வகைகளை அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். இரண்டு மாத பயிரான கீரையை அறுவடை செய்து, கட்டுகளாக கட்டி, ஒரு கட்டு கீரை 5 ரூபாய் என்று விற்பனை செய்கின்றனர். சங்கராபுரம் கடைவீதியில் மாலை நேரங்களில் பலரும், கீரை விற்பனை செய்கின்றனர். மேலும், விவசாய குடும்பத்தினர் பலரும், சங்கராபுரம், பாண்டலம், சோழம்பட்டு, அத்தியூர், அரசம்பட்டு, புதுப்பட்டு, மூங்கில்துறைப்பட்டு, மூரார்பாளையம் ஆகிய ஊர்களில் கூடுகின்ற வாரச்சந்தைகளுக்குச் சென்று கீரை விற்பனையில் ஈடு படுகின்றனர். மற்ற காய்கறிகளை விட கீரை விலை குறைவாக இருப்பதால், பொது மக்கள் அதிகளவில் கீரையை வாங்கிச் செல்கின்றனர். குறைந்த செலவில் அதிக லாபம் தரும் கீரை சாகுபடியில், சங்கராபுரம் பகுதி விவசாயிகள் தற்போது ஆர்வமாக ஈடுபட்டுள்ளனர்.

## சங்கராபுரம் பகுதியில் இடியுடன், கன மழை

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதியில் இடியுடன் கூடிய கன மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சங்கராபுரம் பகுதியில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.

இதனால் பகலில் காலை முதல் மாலை வரை மக்கள் வீட்டை விட்டு வெளியே வராமல் வீட்டுக்குள் முடங்கி கிடந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை, வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

இரவு இடியுடன் கூடிய மழை பெய்தது. தொடர்ந்து ஒரு மணி நேரம் பெய்த மழையால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழை காய்ந்த கரும்பு பயிர்களுக்கு, பயனுள்ளதாக அமைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மழைக்கு பின், குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## சங்கராபுரம் பகுதியில் மாம்பழ விற்பனை "ஜோர்'

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதியில் மாம்பழ விற்பனை சூடுபிடித்துள்ளது. மாம்பழ சீசன் தற்போது துவங்கி உள்ள நிலையில், சங்கராபுரம் கடைவீதியில் உள்ள பழக்கடைகளில் மா ாம்பழ விற்பனை சூடுபிடித்துள்ளது. இந்தாண்டு போதிய மழை இல்லாவிட்டாலும், காற்று இல்லாததால் விளைச்சல் அதிகமாகவே உள்ளது. வழக்கத்தை விட முன்னதாகவே சீசன் ஆரம்பித்துள்ளதால், விலையும் கடந்தாண்டைப்போல் குறைவாக உள்ளது. சங்கராபுரம் கடைவீதியில் உள்ள கடைகளில், செந்தூரா மாம்பழம் ஒரு கிலோ 40 ரூபாய், பங்கனபள்ளி மாம்பழம் 60, காலாபாடி 80, அல்போன்சா 60, ஒட்டு மாம்பழம் ஒரு கிலோ 40 ரூபாய் என விற்பனை செய்யப்பட்டது.

## குறுவை பட்டத்தில் இயற்கை உரத்தில் நெல் பயிர்

**மரக்காணம்**: குறுவை பட்டத்தில் இயற்கை உரங்களான அவுரி, சணப்பை. தக்கைபூண்டு பயன்படுத்தி பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மரக்காணம் ஒன்றியத்தில் கந்தாடு, ஆலத்தூர், அசப்பூர், நடுக்குப்பம். புதுப்பாக்கம், அனுமந்தை உள்ளிட்ட கிராமங்களில் கிணற்று நீரை பயன்படுத்தி குறுவை பட்டத்தில் பயிர் செய்ய விவசாயிகள் தயாராகி வருகின்றனர் . கோடை மழை பெய்ததால் உற்சாகமடைந்த விவசாயிகள் வேளாண் துறையின் ஆலோசனைபடி பசுந்தாள் உரங்களான அவுரி, சணப்பை, தக்கை பூண்டு வளர்த்து வருகின்றனர். இயற்கையாக மண்ணிற்கு தேவையான தழை சத்து கிடைப்பதால் ரசாயன உரத்தின் பயன்பாடு மற்றும் செலவு குறைகிறது. அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்களின் மூலக்காரணம் அவுரி போன்ற தழைசத்து உள்ள உரங்கள் ஆகும். இம்மாதம் பரவலாக மழை பெய்து வருவதால் கிணறு, ஆழ்துளைகிணறு பாசன விவசாயிகள், நெல்பயிர் செய்ய நாற்று விடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## வேன் வைக்கோல் விற்பனை ஜோர் அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை

**பாப்பிரெட்டிப்பட்டி**: தர்மபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில், வேன் வைக்கோல் விற்பனை ஜரூராக நடந்து வருகிறது.

விவசாயிகளின் நலன் கருதி, கால்நடை மருந்தகத்தில் வைக்கோல் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் சில மாதங்களாக கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது பெய்த மழையால், விளைநிலங்களில் புற்கள் முளைக்க துவங்கி உள்ளன. இருந்த போதிலும், வறட்சியால் பொதுமக்கள் மட்டுமின்றி, கால்நடைகளும் பெருமளவு பாதிக்கப்பட்டன.

இதனால், தீவன பற்றாக்குறையால், கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதனால், விவசாயிகள் வைக்கோல்களை, வாங்க, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், புதுச்சேரி உள்ளிட்ட இடங்களுக்கு சென்று, வாங்கி வருகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு, புரோக்கர்கள் மினிவேன், மற்றும் டெம்போ, லாரி மூலமாக வைக்கோல்களை ஏற்றி வந்து, சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர். இந்த வைக்கோல்கள், கடத்தூர், ஒடசல்பட்டி கூட்ரோடு, பொம்மிடி, பாப்பாரப்பட்டி, தர்மபுரி உள்ளிட்ட பல பகுதிகளில் விற்கப்படுகிறது.

சிறிய மினிவேன் லோடு, 3,000 ரூபாய் முதல், 6000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால், மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்பட்ட போதிலும், வேனில் விற்கப்படும் வைக்கோல்களை விலைக்கு வாங்கி, விவசாயிகள், தாங்கள் வளர்க்கும் கால்நடைகளை காப்பாற்றி வருகின்றனர்.

இதனால், கிராமங்கள் தோறும் வைக்கோல் விற்பனை மும்முரமாக நடந்து வருவதால், சில தினங்களுக்குமுன், அரசு கால்நடை மருத்துவமனைகளிலும், மருந்தகத்திலும், மானிய விலையில், ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கு, வைக்கோல் விற்கப்பட்டதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தற்போது, கால்நடைகளுக்கு மானிய விலையில் கொடுக்கப்படும் வைக்கோல், நிறுத்தப்பட்டதால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

எனவே, வைக்கோல்களை மீண்டும் மானிய விலையில், கால்நடை மருந்தகம் மூலம் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பெருந்துறையில் ரூ.93 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**

**ஈரோடு**: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.93 லட்சத்திற்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது. பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க கொப்பரை தேங்காய் ஏலத்திற்கு விவசாயிகள், 1911 மூட்டைகளில் 92 ஆயிரம் கிலோ கொண்டு வந்திருந்தனர்.

முதல் தரம் குறைந்த பட்ச விலை கிலோ ரூ.106.50, அதிகபட்சம் ரூ.108.70, இரண்டாம் தரம் குறைந்த பட்ச விலை கிலோ ரூ.71.25, அதிக பட்சம் ரூ.ரூ.105 என மொத்தம் ரூ.93 லட்சத்திற்கு விற்பனை ஆனது. கடந்த புதன்கிழமை நடந்த ஏலத்தை விட கிலோவுக்கு ரூ.2.50 அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

தேங்காய்க்கும் அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. வரத்து குறைந்துள்ள நிலையில் தேவை அதிகரித்து இருப்தால் விலை அதிகரித்துள்ளது. தேங்காய் உடனுக்குடன் விற்று விடுவதால் கொப்பரை தேங்காய் வரத்து குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வரும் நாட்களில் கொப்பரை தேங்காய்க்கு கிராக்கி அதிகரித்து மேலும் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பெரிய வெங்காயம் விளைச்சல் குறைவு பற்றாக்குறையால் விலை உயரும் அபாயம்**

**ஈரோடு**: வெளிமாநிலங்களில் உற்பத்தி குறைவால், வரும் காலங்களில் பெரிய வெங்காயம் விலை உயரவாய்ப்புள்ளதாக, ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட் வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில், 736 கடைகள் உள்ளன. இங்குள்ள கடைகளுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பலவிதமான காய்கறிகள் விற்பனைக்காக வருகின்றன. ஈரோடு மாவட்டத்தை சுற்றியுள்ள சிறிய, பெரிய வியாபாரிகள், இங்கு வந்து வாங்கி செல்கின்றனர்.

சமையலுக்கு உகந்த காய்கறிகளில், தக்காளிக்கு அடுத்த படியாக, சிறிய மற்றும் பெரிய வெங்காயம் உள்ளது. சமீபகாலமாக சிறிய வெங்காயத்தை காட்டிலும் பெரிய வெங்காயத்தின் விலை ஏற்ற இறக்கமாகவே உள்ளது. இதனால் அதன் விலை நிலையில்லாமல் உள்ளது.

நேதாஜி காய்கறி மார்க்கெட் வெங்காய வியாபாரி முருகேசன் கூறியதாவது: சமையலுக்கு முக்கியமாக சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் தேவைப்படுகிறது. பெரிய வெங்காயம், அதிகளவில் வெளிமாநிலங்களில் இருந்து இறக்குமதியாகிறது. சோலாப்பூர், புனா, அகமதுநகர், பெங்களூர் ஆகிய இடங்களில் இருந்து விற்பனைக்காக வருகிறது. தவிர, மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து விற்பனைக்காக வருகிறது.

சமீபகாலமாக பெண்கள் சிறிய வெங்காயத்தை காட்டிலும், பெரிய வெங்காயம் அதிகளவில் சமையலுக்கு பயன்படுத்துகின்றனர். 52 கிலோ முதல் 60 கிலோ வரை எடையில் மூட்டைகளாக வருகிறது. பெரிய வெங்காயத்தின் உற்பத்தி குறைவால், அதன் விலையும் ஏற்ற இறக்கமாக உள்ளது. சிறிய ரகம், மீடியம், பெரிய ரகம் என மொத்தம் மூன்று ரகங்கள் பெரிய வெங்காயத்தில் உள்ளது.

கிலோவில் 17 ரூபாய், 18 முதல் 20 ரூபாய் வரை மொத்த விலையில், வியாபாரிகளுக்கு கொடுக்கிறோம். வெளிமாநிலங்களில் பெரிய வெங்காயம் உற்பத்தி குறைவால் வரும் காலங்களில் அதன் விலை உயர வாய்ப்புள்ளது. பள்ளி விடுமுறை நாட்கள் என்பதால், பெரிய வெங்காயம் விற்பனை மந்தமாக உள்ளது' என்றனர்.

## பிரைடு ரைஸ் தயாரிக்க கலர்கலராக பெங்களூரு குடை மிளகாய் வருகை

ஈரோடு: ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில், கண்ணை பறிக்கும் வகையில், சிகப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில், குடைமிளகாய்கள் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு டவுன் பகுதியில் எண்ணற்ற பாஸ்ட் ஃபுட் கடைகள் உள்ளன. நூடுல்ஸ், எக்ரைஸ் ஆகிய உணவு ரகங்கள் சமைக்க, அதிகளவில் குடைமிளகாய்கள் பயன்படுத்தப்படுகிறது. குடைமிளகாய்கள் அதிகளவில் பெங்களூரில் இருந்து ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக வருகின்றன. பெரும்பாலும் குடைமிளகாய்களில் பச்சைகலரில் தான் விற்பனைக்கு வரும். தற்போது சிகப்பு, மஞ்சள் ஆகிய கலரில் விற்பனைக்காக வருகிறது. இதுபற்றி ஈரோடு குடைமிளகாய் வியாபாரி ஒருவர் கூறுகையில், "பெங்களூரில் இருந்து குடைமிளகாய்கள் விற்பனைக்காக வருகின்றன.

முதலில் பச்சை நிறத்தில் மட்டுமே விற்பனைக்கு வந்தன. தற்போது சிகப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில் வருகின்றன. ஹோட்டல்களில் பஜ்ஜி போட, பாஸ்ட்ஃபுட் தயாரிக்க மட்டுமே குடைமிளகாயை அதிகளவில் வாங்கி செல்கின்றனர். இதன் விலை கிலோ 40 ரூபாய்க்கு போகிறது' என்றார்.

## மலர் சாகுபடியில் நாள்தோறும் வருவாய் ஈட்டலாம்; தோட்டக்கலைத்துறை தகவல்

**உடுமலை** : 'ரோஜா, முல்லை, மல்லி உள்ளிட்ட மலர்களை, குறைந்த பரப்பில் குறைந்த நிர்வாகச்செலவில் சாகுபடி செய்து தினமும் வருமானம் பெறலாம்,' என, உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: விவசாயிகள் நாள்தோறும் வருமானம் பெற திட்டமிட வேண்டும்; பொருளாதார சூழ்நிலையை உயர்த்திக் கொள்ள முடியும். விவசாயிகள் தங்கள் ஒவ்வொரு சதுர செ.மீ., இடத்தையும் சிறப்பாக பராமரித்து, மண் வளம் சேர்க்க வழிவகை செய்ய வேண்டும். சீரான நீர் நிர்வாகம் மற்றும் காற்றுத் தடுப்பான் ஏற்பாடும், பசுமை வலை மூலம் சூரிய ஒளி நிர்வாகமும் செய்யும் போது, நல்ல தரமான விளைபொருட்களை பெறலாம். இம்முறையில் புதினா மற்றும் மல்லிக்கு அதிக வாய்ப்புள்ளது. குறைந்த பரப்பு உள்ள போதும், சிறு சிறு பாத்திகளாகப்பிரித்து, சிறுகீரை, அகத்திக்கீரை, கறிவேப்பிலை உள்ளிட்டவற்றையும் சாகுபடி செய்து நல்ல வருவாய் பெறலாம். மண் பயிர்கள் மூலம் மண்ணுக்கு தேவையான சத்து என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். சத்துப்பற்றாக்குறை வருவதை தடுக்க பயிரிடும் முன்பே மண் மற்றும் நீர் ஆய்வு செய்தல் வேண்டும்.

இதற்கான மண் ஆய்வகம் ஒவ்வொரு மாவட்டத்திலும், தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுடன் தமிழ்நாடு வேளாண் பல்கலை மற்றும் தனியார் மையங்களிலும் மண் பரிசோதனை செய்து கொள்ளலாம். ரோஜா, முல்லை, மல்லி, துளசி, சம்பங்கி, கனகாம்பரம், செவ்வரளி உள்ளிட்ட மலர்கள் தினமும் வருவாய் தருபவை. மார்க்கெட் விலையில் ஏற்றத்தாழ்வு இருந்தாலும், இவற்றை அதிகம் பாதிப்பதில்லை. குறைந்த பரப்பில் குறைந்த நிர்வாக செலவில், இவற்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை கிடைப்பதால், விவசாயிகளுக்கு தினமும்

வருவாய் கிடைக்கிறது. விவசாயிகள் தங்கள் பயிர்த்திட்டத்தில் மலர்கள் சாகுபடியை சேர்ப்பதுடன், மூலிகைகள், செடி முருங்கை, சீத்தா, சப்போட்டா, தவசுக்கீரை ஆகியவற்றையும் சாகுபடி செய்து அவ்வப்போது நல்ல வருமானம் ஈட்டலாம். மேலும் விபரங்களுக்கு, 98420 07125 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தீவனப்பயிர்கள் விதை உற்பத்தி சந்தை வாய்ப்பு இலவச பயிற்சி

**பெரம்பலூர்**: "பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் தீவனப் பயிர்கள் விதை உற்பத்தி மற்றும் சந்தை வாய்ப்பு குறித்த இலவச பயிற்சி வகுப்பு மே 22ம் தேதி நடக்க உள்ளது' என மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

தீவனப் பயிர்கள் விதை உற்பத்தி மற்றும் சந்தை வாய்ப்பு என்ற தலைப்பின் கீழ், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஒரு நாள் இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சியில், பெரம்பலூர் மாவட்ட தட்ப வெப்ப நிலைக்கேற்ற தீவனப்பயிர்கள் மற்றும் பயன்கள், லாபகரமான விதை உற்பத்தி மற்றும் அதற்கான சந்தை வாய்ப்பு உள்ளிட்ட தலைப்புகளின் கீழ் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் இலவச பயிற்சியில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது பெயரை 04328-293251, 293592 ஆகிய நம்பரில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து பயன்பெறலாம். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## எலுமிச்சை விலை உயர்வு

**பேரையூர்** : பேரையூர் பகுதியில் எலுமிச்சை கொள்முதல் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. இத்தாலுகாவில் 200 ஏக்கருக்கும் மேல் எலுமிச்சை சாகுபடி நடக்கிறது. இதற்கு குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படுவதால், நெல்லுக்கு பதில் பலர் எலுமிச்சை சாகுபடியில் இறங்கினர். ஆனால், வறட்சி காரணமாக விளைச்சல் குறைந்த தால், மொத்த கொள்முதல் விலை ரூ.120 வரை

உயர்ந்துள்ளது. இதனால், விலை இருந்தும் விளைச்சல் இல்லாததால் எலுமிச்சை சாகுபடி செய்த விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

## காளானுக்கு தட்டுப்பாடு

**தேனி** : தேனி மாவட்டத்தில் இயற்கை காளானுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக கிலோ 500 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில், இயற்கை காளான் விளைச்சல் அதிகம் இருக்கும். இவைகளை பறித்து, கிலோ 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை தரத்திற்கு ஏற்ப, விற்பனை செய்வார்கள். ரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய் உள்ளவர்கள், இந்த காளான்களை வாங்கி பயன்படுத்துவர். காளான் விற்பனை தொடங்கிய,சிறிது நேரத்தில் விற்றுத்தீர்ந்து விடும். இந்நிலையில், நடப்பு ஆண்டு பலத்த மழை பெய்தும், காளான் உற்பத்தி குறைவாக உள்ளது. இதனால் இயற்கை காளானுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, காளான் விலையை கிலோ 500 ரூபாய் வரை உயர்த்தி விட்டனர்.

## உர விற்பனையை கண்காணிக்க குழு அமைக்க உத்தரவு

**தேனி** : தேனி மாவட்டத்தில், உரங்கள் விற்பனை செய்யப்படுவதை கண்காணிக்க, குழு அமைக்க வேண்டும், என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தேனி மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடி தொடங்க உள்ளது. விவசாய, தோட்டக்கலை சாகுபடி பெரும் பாதிப்பிற்கு உள்ளானது. இதுவரை, பெய்த புயல் மழையால் அணைகள், குளங்கள், கண்மாய்களுக்கு நீர் வரத்து தொடங்கி உள்ளது. விவசாயிகளும் விவசாய பணிகளை தொடங்கி உள்ளனர்.இந்நிலையில், உரங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல உரங்களுக்கு, செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு, அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.விவசாயிகள் இதனால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர். எனவே, அரசு தேவையான அளவு உரங்களை, தொடக்க கூட்டுறவு சங்கங்கள் மூலம் சப்ளை செய்ய உத்தரவிட்டுள்ளது.இச்சங்கங்கள் மூலம், விவசாயிகளுக்கு உரங்கள் சப்ளை செய்யப்படும் விவரத்தை, தினமும் அறிக்கையாக அனுப்பி வைக்கவும், வெளிமார்க்கெட்டில் விவசாயிகளுக்கு

உரங்கள் முறையாக விற்கப்படுவதை கண்காணிக்க, மாவட்டத்தில் குழு அமைக்க வேண்டும்.இக்குழுவில் யார், யார் இடம் பெற்றுள்ளனர். அவர்களது மொபைல் எண், என்ன என்பது உட்பட விவரங்களை விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும் எனவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உயரும் வைகை அணை நீர் மட்டம்

**ஆண்டிபட்டி** : வைகை அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. கடந்த வாரம் பெரியாறு, வைகை அணை நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. பெரியாறு அணையில் திறந்து விடப்படும் நீர் தொடர்ந்து, வைகை அணைக்கு வந்து சேர்கிறது.வைகை அணைக்கான நீர் வரத்து ஏதும் இல்லாத நிலையில், மே 6ல் அணை நீர் மட்டம் 20.96 அடியாக குறைந்தபோது, குடிநீர் பஞ்சத்திற்கான அபாயம் ஏற்பட்டது.கோடை மழையின் கொடையால், அணைக்கு கணிசமான அளவு நீர் வரத்து ஏற்பட்டது. பெரியாறு அணை நீர் பிடிப்பு பகுதியில், பெய்த மழையால் அங்கிருந்து திறக்கப்பட்ட நீர், கடந்த 15 நாட்களாக வைகை அணைக்கு வருகிறது.இதனால், அணை நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. வைகை அணைக்கான நீர் வரத்து, நேற்று வினாடிக்கு 186 கன அடியாக இருந்தது. அணை நீர் மட்டம் 32.91(71)அடியாக உயர்ந்தது. கடந்த 12 நாளில் நீர் மட்டம் 12 அடி வரை உயர்ந்துள்ளது. அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீருக்காக வினாடிக்கு 40 கன அடி வீதம் திறந்து விடப்பட்டுள்ளது. பெரியாறு அணையில் நீர் திறப்பு குறைப்பு:பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், கடந்த 3 தினங்களாக மழையின்றி, அணைக்கு நீர்வரத்து 3 கன அடியாக குறைந்துள்ளது. இதனால், அணையின் நீர்மட்டம் குறைந்து 114.20 அடியாக உள்ளது. நீர்மட்டம் குறைந்து வருவதைத் தொடர்ந்து, தமிழகப்பகுதிக்கு திறந்து விடும் நீர்திறப்பு 200 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. வீரபாண்டி திருவிழாவிற்காக, கடந்த 15 தினங்களுக்கு முன், 500 கன அடியாக திறக்கப்பட்டிருந்தது.நீர் இருப்பு 1593 மில்லியன் கன அடியாகும். நீர்பிடிப்பு பகுதியில் மழையில்லாததால், அணையின் நீர்மட்டம் மேலும் குறையும் நிலை உள்ளது.

## புளி விளைச்சல் சரிவால் விலை அதிகரிப்பு

**போடி** : தேனி மாவட்டத்தில், கடந்த ஆண்டை காட்டிலும் புளி விளைச்சல் குறைந்துள்ளதால், விலை இரண்டு மடங்கிற்கு மேல், விலை அதிகரித்துள்ளது. தேனி மாவட்டத்தில், போடி, சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் புளி விளைச்சல் உள்ளது. புளி, இங்கிருந்து தமிழகம் மட்டுமின்றி பக்கத்து மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஜன., முதல் ஏப்., வரை, புளி சீசன் இருக்கும். தேனி மாவட்டத்தை பொறுத்தவரை, கடந்த ஆண்டு துவக்கத்திலே மழை பெய்ததினால், புளி விளைச்சல் அதிகரித்து, விலையும் குறைந்திருந்தது. கடந்த ஆண்டு, குவிண்டால் கொட்டை புளி, 3 ஆயிரத்தி 500 ரூபாய் வரை இருந்தது. இந்த ஆண்டு, போதுமான அளவிற்கு மழை இல்லாததினால், புளிய மரங்களில் பூ பூக்க காலதாமதம் ஏற்பட்டதோடு, விளைச்சலும் குறைந்துள்ளது. புளி விளைச்சல் குறைந்ததால்,சீசன் துவக்கத்தில் கொட்டை எடுக்கப்பட்ட புளி, குவிண்டால் 6 ஆயிரத்து 250 ரூபாய் வரை இருந்தது.சில்லரையில், கிலோ 70 முதல் 80 ரூபாய் வரை இருந்தது. கடந்த மாதம் குவிண்டால், 6 ஆயிரத்து 800 வரை இருந்தது. சில்லரையில் 80 முதல் 90 ரூபாய் வரை இருந்தது. தற்போது சீசன் முடியும் நிலையில் உள்ளதால், குவிண்டால் 8 ஆயிரத்தி 500 ரூபாய் வரை விலை போகிறது. சில்லரையில் கிலோ 90 முதல் 100 ரூபாய் வரை உள்ளது கடந்த ஆண்டை காட்டிலும், புளி விளைச்சல் குறைந்துள்ளதால், இந்த ஆண்டு இரண்டு மடங்கிற்கு மேல் விலை உயர்ந்துள்ளது. விலை மேலும் உயர வாய்ப்புள்ளதால், இருப்பு வைக்கவும், கொள்முதல் செய்யவும் மொத்த வியாபாரிகள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

## வைகை அணையில் நுண் மீன் வளர்ப்புக்கு தொட்டிகள் தயார்

ஆண்டிபட்டி : வைகை அணையில், நுண் மீன் குஞ்சுகள் வளர்ப்புக்கு, மீன் தொட்டிகள் தயாராகி வருகின்றன.

தென்மேற்கு,வடகிழக்கு பருவ மழையால், அந்தந்த ஆண்டில், குறிப்பிட்ட சில மாதங்களில், வைகை அணை நீர் மட்டம் உயரும். அணைக்கான நீர் வரத்து ஏற்படும் காலத்தை கணக்கிட்டு,ஒவ்வொரு ஆண்டும், அணை நீர் தேக்கத்தில் லட்கணக்கான மீன் குஞ்சுகள் விடப்படும்.விடப்படும் மீன் குஞ்சுகள், மீன்

வளத்துறை மூலம் பிடிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படும். 2014-15ம் ஆண்டுக்கு,வைகை அணையில் 15 லட்சம் நுண் மீன் குஞ்சுகளை விடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வைகை அணை மீன் வளர்ப்புதுறை அலுவலகத்தில் 50 மீன் தொட்டிகள் உள்ளன. தற்போது, இந்த மீன் தொட்டிகளுக்கு, வர்ண பூச்சு நடந்து வருகிறது. இன்னும் சில நாட்களில், பவானி சாகர் நீர் தேக்கப்பகுதியில் இருந்து, 15 லட்சம் நுண்மீன் குஞ்சுகளை கொண்டு வர ஏற்பாடுகள் நடந்து வருகிறது. அங்கிருந்து கொண்டு வரப்படும், நுண்மீன் குஞ்சுகள் தொட்டிகளில் விடப்பட்டு, தொடர்ந்து பராமரிக்கப்படும். மீன் குஞ்சுகள் விரலிகளாக(விரல் அளவு மீன்களாக) வளர்ந்தபின், வைகை அணை நீர் தேக்கத்தில் விடப்படும்.

இது குறித்து, மீன் வளத்துறை அதிகாரிகள் கூறியதாவது: ஒரு லட்சம் நுண்மீன் குஞ்சுகளில் இருந்து 20 ஆயிரம் மீன் குஞ்சுகள் வரைதான் எடுக்க முடியும். மற்றவை, அழிந்து விடும். அவை, விரலிகளாக வளர்ந்தபிறகே, அணைநீர் தேக்கத்தில் பத்திரமாக விடப்படும்.இந்த ஆண்டு முழுவதும், இந்த மீன்கள் பிடிக்கப்படும். ரோகு, மிருகாள் வகை நுண்மீன்குஞ்சுகள் வளர்ப்புக்காக விடப்படும். அணையில் ஏற்கனவே உள்ள இயற்கை மீன்களான கெண்டை, சொட்டைவாளை, ஆறா, போன்றவற்றுடன், செயற்கையாக விடப்பட்ட மீன்களும் வளரும்,என்றனர்.

## திருந்திய நெல் சாகுபடி திட்டம் தயக்கத்திற்கு காரணம் என்ன

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில், திருந்திய நெல் சாகுபடி திட்டத்தை பின்பற்ற விவசாயிகள் தயக்கம் காட்டுவதால், 12 ஆயிரம் எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறை பின்பற்றப்படவில்லை.

முல்லைப் பெரியாறு பாசனத்தில், கூடலூர் முதல் பழனிசெட்டிபட்டி வரை, இருபோகம் மற்றும் ஒருபோக விவசாயம் 21 ஆயிரத்து 300 எக்டேரில் நடக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக, "திருந்திய நெல்சாகுபடி' திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, விவசாயிகளால் பின்பற்றப்பட்டு வருகிறது.இத்திட்டத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 2,000 ரூபாய் பணமாகவும், ஆயிரம் ரூபாய்க்கு இடுபொருள்கள், இலவசமாக வழங்கப்படுகிறது.இந்த திட்டத்தில்,நாற்றுகள் ஒரே வரிசையாக நடவு செய்ய வேண்டும். ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சி மருந்து

பயன்படுத்துவது, நோய் எதிர்ப்பு திறன் கொண்ட விதை,அதிக மகசூல் ஆகியவை சிறப்பாகும். இருந்த போதும்,இந்த முறையை பின்பற்ற பெரும்பாலான விவசாயிகள் மறுத்து வருகின்றனர்.

கம்பம் பள்ளத்தாக்கில், 9,000 எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறை பின்பற்றப்பட்டுள்ளது. 12 ஆயிரம் எக்டேரில் செயல்படுத்தப்படவில்லை. நடவு செய்வதற்கு அதிக ஆட்கள், கூடுதல் கூலி தேவைப்படும். கூடுதல் நேரமாகும்.தொழிலாளர் பற்றாக்குறை உள்ளதால், இந்த முறை சரியாக வராது, என்று விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது. திட்டத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்றால், நடவுக்கு இயந்திரங்கள், தொடக்க கூட்டுறவு வங்கிகள் மூலம் வாடகைக்கு தர வேண்டும். அவ்வாறு செய்தால் நடவு செலவு குறையும். தொழிலாளர் தேவை குறையும். எனவே விவசாயத்துறை இந்த ஆண்டு முதல் போகத்திலாவது, திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் முழுமையாக பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும்.

## 400 பண்ணை குட்டைகள் சிறுதானிய சாகுபடிக்கு தயார்

ராமநாதபுரம் : கோடை மழை நிரம்பிய 400 பண்ணை குட்டைகள் சிறுதானிய பயிர்கள் சாகுபடிக்கு தயாராகி வருகின்றன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மே 5, 6, 7 தேதிகளில் கோடை மழை பெய்தது. இதில் ஆர்.எஸ்.மங்கலம், நயினார்கோவில், கடலாடி, முதுகுளத்தூர் வட்டாரங்களில் உள்ள 400 பண்ணை குட்டைகளில் தண்ணீர் நிரம்பின. இக்குட்டைகளில் மீன்குஞ்சுகள் வளர்க்க, விவசாயிகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண் திட்டம் மூலம் நிலமற்ற விவசாய கூலித்தொழிலாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுய உதவி குழுக்களுக்கு தலா ரூ.24 ஆயிரம் வட்டியில்லா கடன் வழங்கப்படுகிறது.

வேளாண் பண்ணை உற்பத்தி திட்டம் மூலம் பழமரக்கன்றுகள், புறம்போக்கு நிலங்களில் மரக்கன்றுகள் நடவு செய்து சமுதாய காடுகள் உருவாக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. பண்ணை குட்டைகளில் நிரம்பிய தண்ணீரைக் கொண்டு மிளகாய், பருத்தி, நிலக்கடலை, சிறு தானிய பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர்.

## கோடை உழவு மேற்கொள்ள விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

காரைக்கால்: காரைக்கால் மாவட்டத்தில் கடந்த வாரத்தில் பெய்த மழையை பயன்படுத்தி, கோடை உழவு மேற்கொள்ள வேண்டும் என வேளாண் துறை அறிவுறுத்தி உள்ளது.

இதுகுறித்த கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த வாரத்தில் பெய்த மழையை பயன்படுத்தி, விவசாயிகள் கோடை உழவு மேற்கொள்ள வேண்டும்.

இதனால் அடி மண்ணின் இறுக்கம் நீக்கப்படுகிறது. மண்ணின் நீர் பிடிப்புத்திறன் 20 சதவீதம் வரை அதிகரிப்பதால் விளைச்சல் உயர வாய்ப்புள்ளது.

மண்ணின் இறுக்கம் குறைந்து பொல பொலப்பு தன்மை அதிகரித்து பயிர்கள் வேர் விட்டு வளரும் தன்மை பெறுகிறது. சாகுபடி செய்ய உள்ள நிலத்தில் களைச் செடிகள் அழிக்கப்படுவதால் பயிர் பெருமளவு பாதுகாக்கப்படுகிறது.

பயிர்களை தாக்கும் பூச்சி, புழுக்கள் மண்ணுக்குள் இருந்து வெளியில் வரும்போது சூரிய வெப்பத்தினால் அழிக்கப்படுகிறது.

சாகுபடி பயிரில் பூச்சிகள் தாக்குதல் குறைகிறது. கோடை உழவு செய்வதால் மண்ணின் வளம் பாதுகாக்கப்படுவதுடன் பருவத்தில் விதைக்க நிலத்தை தயார் செய்வது எளிதாகிறது.

நெல் சாகுபடியில் நடவு வயலை தயார் செய்வதற்கு தேவைப்படும் பாசன நீரின் அளவு 30 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது. மண் வளம் பாதுகாக்கவும் சாகுபடி வயல்களில் பூச்சி நோய் தாக்குதலை குறைக்கவும் கோடை உழவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### முன்கூட்டியே பெய்யும் தென்மேற்கு பருவமழை மே 28 முதல் துவங்கும்



**நெல்லை:** அக்னி நட்சத்திரம் தொடங்கியபோது, குமரி அருகே தோன்றிய காற்றழுத்த தாழ்வு நிலையால், தென்மாவட்டங்களில் கனமழை கொட்டியது. தொடர்ந்து 5 நாட்கள் பெய்த மழையால் வெப்பம் தணிந்தது. அணைகளிலும் கணிசமான அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்தது. இந்நிலையில், அக்னி நட்சத்திரம் முடிய இன்னும் 10 நாட்கள் உள்ள நிலையில், அந்தமானில் தென்மேற்கு பருவமழைக்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. அங்கு வரும் 20ம் தேதி தென்மேற்கு பருவமழை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், கேரளாவில் வழக்கமான ஜூன் 1ம் தேதிக்கு பதிலாக வரும் 28ம் தேதி தென்மேற்கு பருவமழை தொடங்கும் என வானிலை மைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்போதே நெல்லை, குமரி மாவட்டங்களில் வெயிலுடன் காற்று வீசத்தொடங்கி உள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியையொட்டி உள்ள தென்காசி, செங்கோட்டை பகுதிகளிலும் நல்ல காற்று வீசுகிறது.இந்தியாவின் வருடாந்திர மழையில் 70 சதவீதம் தென்மேற்கு பருவமழை மூலம் கிடைக்கிறது. இதன்மூலம் இந்தியாவில் 235 மில்லியன் விவசாயிகள் பலனடைந்து வருகின்றனர். வழக்கமாக ஜூன் முதல் தேதி தான் தென்மேற்கு பருவமழை தொடங்கும். இந்த ஆண்டு 4 நாட்கள் முன்னதாகவே கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என்பதால், இதை எதிர்பார்த்து விவசாயிகள் சாகுபடிக்கான முன்னேற்பாடுகளை

செய்ய தயாராகி வருகின்றனர். குறிப்பிட்ட நாளில் தென்மேற்கு பருவமழை தொடங்கினால், அதன் பின் வெயிலின் தாக்கம் படிப்படியாக குறைய வாய்ப்புள்ளதாக டெல்லி வானிலை மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வேலூரில் 106 டிகிரி வெயில்



**வேலூர்**: தமிழகத்தில் அதிகபட்சமாக நேற்று 106 டிகிரி வெயில் கொளுத்தியது. இதையடுத்து ஏற்பட்ட வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களில் மழை பெய்தது. கத்ரி வெயில் உச்சத்தை எட்டியுள்ள நிலையில் தமிழகத்தில் கடந்த இரண்டு நாட்களாக வெயில் கடுமை காணப்படுகிறது. நேற்று அதிகபட்சமாக வேலூரில் 106.3 டிகிரி வெயில் கொளுத்தியது. இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் வேலூரில் வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருக்கும். கடந்த ஆண்டு 111 டிகிரி வரை வெயில் எகிறியது. அதைத் தொடர்ந்து மதுரை விமான நிலையத்தில் 104 டிகிரியும், திருச்சி, சேலம், கரூர், தர்மபுரி ஆகிய இடங்களில் 103 டிகிரியும் வெயில் கொளுத்தியது. சென்னையில் நேற்று முன்தினத்தை விட 3 டிகிரி குறைந்து 99 டிகிரியாக வெயில் நிலவியது. மற்ற இடங்களில் வெயி லின் தாக்கம் சராசரியாக 98 டிகிரியாக இருந்தது.

இதனால், பொதுமக்கள் காலை முதல் மாலை 5 மணிவரை நடமாட முடியாத நிலை உள்ளது. குறிப்பாக அனல் காற்று காரணமாக பொதுமக்கள் வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.தொடர்ந்து நிலவும் வெயில் காரணமாக வெப்ப சலனம் ஏற்பட்டுள்ளது. இதனால் கடல் பகுதியில் இருந்து லேசான குளிர் காற்று வீசத் தொடங்கியுள்ளது. மேலும் வெப்ப சலனம் ஏற்பட்டு ஓமலூர்,

சங்கராபுரம், ஓசூர், தேன்கனிக் கோட்டை ஆகிய இடங்களில் 20 மிமீ மழை பெய்துள்ளது. சூளகிரி, போச்சம்பள்ளி, வால்பாறை, திருக்கோயிலூர் ஆகிய இடங்களில் 10 மிமீ மழை பெய்துள்ளது. இன்றும் நாளையும் பரவலாக தமிழகத்தில் லேசான மழை பெய்யும்.இருப்பினும் பொதுவாக வறண்ட வானிலை காணப்படும். சராசரியாக 100 டிகிரி வரை வெயில் நிலவும்.

**<u>பச்சை மிளகாய் விலை சரிந்தது</u>**



**கோவை**: கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தைக்கு கர்நாடகா மாநிலம் மைசூர், ஒட்டன் சத்திரம், தொண்டாமுத்தூர், மதுக்கரை, நரசீபுரம், செம்மேடு, ஆலாந்துறை பகுதிகளில் இருந்து பச்சை மிளகாய் வரத்து உள்ளது. கடந்த மாதத்தில் மைசூர், ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து வரத்து அதிகமாக இருந்ததால், 1 கிலோ பச்சை மிளகாய் 30க்கு விற்றது.

இந்நிலையில் கடும் வெயில் எதிரொலியால் கடந்த வாரங்களில் பச்சை மிளகாய் விளைச்சல் பாதிக்கப்பட்டு, உழவர் சந்தைக்கு 200 முதல் 300 கிலோ அளவே பச்சை மிளகாய் வரத்து வந்தது.

இதனால், விலை அதிகரித்து 1 கிலோ பச்சை மிளகாய் ரூ.65க்கு விற்கப்பட்டது. இந்நிலையில் கர்நாடகா மாநிலம் மைசூர் பகுதிகளில் இருந்து பச்சை மிளகாய் வரத்து அதிகரித்து தினமும் 800 டன்னுக்கும் மேல் மார்க்கெட்டுக்கு வருவதால் விலை குறைந்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி 1 கிலோ பச்சைமிளகாய் ரூ.15 குறைந்து ரூ.50க்கு விற்றது.

**விலை குறைய வாய்ப்பு உணவு தானிய உற்பத்தி 26 கோடி டன்னாக உயரும்**



**புதுடெல்லி** : நாட்டின் உணவு தானிய உற்பத்தி வரும் ஜுன் மாதத்துடன் முடிவடையும் நடப்பு 2013-14 வேளாண் பருவத்தில் உணவு தானிய உற்பத்தி 26.4 கோடி டன்களாக இருக்கும் என விவசாய அமைச்சகம் கணித்துள்ளது.பருவமழை எதிர்பார்த்ததை விட குறைவாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதனால் சந்தையில் விலை உயர்வு ஏற்படலாம் எனவும், இதை கட்டுப்படுத்த உள்ளூர் தேவையை ஈடுசெய்யும் வகையில் வெளிச்சந்தையில் இருந்து உணவு தானியங்கள் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும்.விவசாய அமைச்சகம் 2013-14 ஆண்டுக்கான 3வது மதிப்பீட்டை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டது.அதன்படி ரபி பருவத்தின் முக்கிய பயிரான கோதுமை உற்பத்தி சுமார் 96 மில்லியன் டன்களாக இருக்கும் எனவும், இது கடந்த ஆண்டை விட சுமார் 23.4 லட்சம் டன் அதிகம் இருக்கும் எனவும் தெரிவித்திருந்தது. கடந்த மே 1ம்தேதி நிலவரப்படி அரசிடம் 6.7 கோடி டன் உணவு தானியம் இருப்பு இருந்தது. இதில் கோதுமை மட்டும் 3.4 கோடி டன்களாகும். அரிசி உற்பத்தி சாதனை அளவான 10.6 கோடி டன்களை எட்டும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.கடந்த 2012-13ல் அரிசி உற்பத்தி 10.5 கோடி டன்களாக இருந்தது. தானிய மொத்த உற்பத்தி 2013-14ல் முந்தை ஆண்டில் இருந்த 1.8 கோடி டன்களில் 2 கோடி டன்களை எட்டும் எனவும், மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி முந்தை ஆண்டை விட 10 லட்சம் டன் அதிகரித்து 3.2 கோடி டன்களாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ரபி பருவத்தில் கடுகு வித்து உற்பத்தி கடந்த பருவத்தை விட 2.5 சதவீதம் குறைந்து 80 லட்சம் டன்களாகும்.பருத்தி 3.7 கோடி பேல்களாகவும், கரும்பு 34.8

கோடி டன்களாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மழை வாய்ப்பு குறைவாக இருக்கும் என்ற பட்சத்தில் இவ்வாறு உற்பத்தி அதிகரிப்பது, விலையை கட்டுப்படுத்துவதில் புதிய அரசுக்கு சாதகமாக அமையும் எனவும், உணவு தானிய விலை குறைய வாய்ப்பு உள்ளது எனவும் உணவு அமைச்சக வட்டாரத்தில் கூறப்படுகிறது.

**<u>முறையாக ஆய்வு செய்து மீன்பிடி தடை காலத்தை மாற்றியமைக்க வேண்டும்: தமிழக மீனவர்கள் வலியுறுத்தல்</u>**



**தூத்துக்குடி:** முறையாக ஆய்வு செய்து தமிழகத்தில் தடை காலத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று விசைப்படகு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழகம் முழுவதும் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை மீன்கள் இனப்பெருக்க காலமாக கருதி 45 நாட்கள் விசைப்படகுகளில் மீன் பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. கடந்த 2001ம் ஆண்டு முதல் இந்த தடை ஆண்டுதோறும் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், இந்த கால கட்டங்களில் மட்டுமே மீன்கள் இனப்பெருக்கம் செய்வதில்லை என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து, தூத்துக்குடி விசைப்படகு தொழிலாளர்கள் சங்க தலைவர் பார்த்தீபன் கூறியதாவது;கடந்த 11 ஆண்டுகளாக தமிழகத்தில் இந்த தடை விதிக்கப்பட்டு வருகிறது. இதனால், மீன்கள் வளம் பெருகும் என கூறுகின்றனர். ஆனால், கேரளாவில் ஜூன், ஜூலை மாதங்களில் மீன் பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. பொதுவாக மீன்கள் பெரும்பாலும் கடலுக்குள் மழை பெய்யும் மாதங்களான நவம்பர், டிசம்பர் மாதங்களில் தான் இனப்பெருக்கம் செய்வது வழக்கம். அதிலும் எல்லா மீன்களுமே இந்த காலத்தில் தான் இனப்பெருக்கம்

செய்கின்றன என கூற முடியாது. ஒவ்வொரு வகை மீன்களும் வெவ்வேறு காலகட்டத்தில் இனப்பெருக்கம் செய்யும். மேலும் சுனாமிக்கு பிறகு இந்த இனப்பெருக்க காலத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. தமிழக கடல் பகுதிகளில் கேரளா மற்றும் இலங்கை மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்களை பிடித்து செல்வதற்கு வசதியாக இந்த தடை காலம் உள்ளது. தடைக்காலம் முடிந்து அதிக மீன்கள் கிடைக்கும் என எதிர்பார்த்து செல்லும் விசைப்படகு மீனவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது.பல இடங்களில் மீன் குஞ்சுகளும், முட்டைகளுமே வலையில் சிக்குகின்றன. எனவே இந்த தடை காலம் குறித்து மறுபரிசீலனை செய்வதுடன், இதுகுறித்து விஞ்ஞானிகள் குழு அமைத்து விரிவாக ஆய்வு நடத்தி தடை காலத்தை மாற்றி அமைக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஈரோட்டில் 106 டிகிரி வெயில் கொளுத்தியது**



**ஈரோடு,**

ஈரோட்டில் நேற்று 106 டிகிரி வெயில் கொளுத்தியது.

<u>வெயிலின் தாக்கம்</u>

ஈரோட்டில் கடந்த மார்ச் மாதத்தின் தொடக்கத்தில் இருந்தே வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இருப்பினும் ஏப்ரல் மாத தொடக்கத்தில்தான் வெயில் அளவு 100 டிகிரியை தொட்டது. இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 25-ந் தேதி ஈரோட்டில் மிக அதிகபட்சமாக 105.8 டிகிரி வெயில் அளவு பதிவாகியது. தொடர்ந்து 3 நாட்கள் ஈரோட்டில் 105.8 டிகிரி வெயில் அளவு பதிவானது.

பின்னர் வெப்ப சலனத்தால் தமிழகம் முழுவதும் மழை பெய்தது. இதன்காரணமாக ஈரோட்டிலும் தொடர்ந்து 3 நாட்களாக மழை பெய்தது. பின்னர் மழை பெய்யாவிட்டாலும் வெயிலின் தாக்கம் குறைந்தே காணப்பட்டது. ஆனால் நேற்று வெயிலின் அளவு மீண்டும் 106 டிகிரியை தொட்டது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் ரோட்டில் அனல்காற்று வீசியது.

<u>வெறிச்சோடியது</u>

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விடுமுறை நாள் என்பதாலும், வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததாலும் ஈரோட்டில் உள்ள பல ரோடுகளில் மக்கள் நடமாட்டத்தை அதிகமாக காணமுடியவில்லை. பல ரோடுகள் வெறிச்சோடி காணப்பட்டது. மேலும் இருசக்கர வாகனங்களில் சென்ற ஒரு சில பெண்கள் சுடிதார் துப்பட்டாவாலும், சேலையாலும் தங்கள் முகத்தை மூடிக் கொண்டனர். அதுமட்டுமின்றி கோடை வெப்பத்தின் உக்கிரத்தை தணிக்க பலர் குளிர்பான கடைகளை தேடிச் சென்றனர். கோடை காலத்தை முன்னிட்டு ஈரோட்டின் பல பகுதிகளில் புதிதாக சாலையோர கடைகள் அதிக அளவில் உள்ளன.

இந்த கடைகளில் கம்பங் கூழ், மோர், தர்ப்பூசணி விற்பனை மும்முரமாக நடந்தது. அதுமட்டுமின்றி ஆங்காங்கே ரோட்டோரங்களில் விற்பனை செய்யப்பட்ட இளநீரை குடித்தும், நுங்கை சாப்பிட்டும் தங்கள் உடல் வெப்பத்தை பொதுமக்கள் தணித்துக்கொண்டனர்.

**<u>பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.93 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்</u>**



**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.93 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது.

<u>கொப்பரை தேங்காய் ஏலம்</u>

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 1,911 மூட்டைகளில் 92 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ குறைந்தபட்ச விலையாக 106 ரூபாய் 50 காசுக்கும், அதிகபட்ச விலையாக 108 ரூபாய் 70 காசுக்கும், 2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ குறைந்தபட்ச விலையாக 71 ரூபாய் 25 காசுக்கும், அதிகபட்ச விலையாக 105 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.93 லட்சத்துக்கு விற்பனை ஆனது. கடந்த புதன்கிழமையை விட இந்த வாரம் கொப்பரை தேங்காயின் விலை கிலோவுக்கு 2 ரூபாய் 50 காசு கூடியிருந்தது.

<u>தேங்காய் விற்பனை</u>

பெருந்துறை வாரச்சந்தையில் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் தேங்காய் நேரடி விற்பனை நடைபெற்றது. இதற்கு விவசாயிகள் 1 லட்சத்து 50 ஆயிரம் தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர்.

இதில் முதல் தரம் தேங்காய் 14 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையும், 2–ம் தரம் தேங்காய் 12 ரூபாய் முதல் 13 ரூபாய் வரையும், 3–ம் தரம் தேங்காய் 10 ரூபாய் முதல் 11 ரூபாய் வரையும் என மொத்தம் ரூ.20 லட்சத்துக்கு விற்பனை ஆனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் தேங்காயின் விலை 1 ரூபாய் கூடியிருந்தது.

## இனப்பெருக்க காலம் என்பதால் மீன் பிடிக்க தடை ஊட்டியில் கடல் மீன்களுக்கு தட்டுப்பாடு

**ஊட்டி**,

மீன்கள் இனப்பெருக்க காலம் என்பதால், தமிழ கத்தில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இதனால் ஊட்டியில் கடல் மீன்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

இதனால் அணை மீன்கள் விற்பனை அதிகரித்து உள்ளது.

இனப்பெருக்க காலம்

தமிழக கடலோர மாவட்டங் களான கன்னியாகுமரி, தூத் துக்குடி, ராமேஸ்வரம் உள் ளிட்ட இடங்களில் இருந்து மீன் வகைகள் நீலகிரி உள்பட தமிழகத்தின் அனைத்துமாவட் டங்களுக்கும் கொண்டு செல் லப்பட்டு விற்பனை செய்யப் பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15–ந் தேதி முதல் மே 31–ந் தேதி வரை மீன்கள் இனப்பெருக்க காலம் ஆகும்.

இந்த காலத்தில் தமிழக கடல் பகுதிகளில் மீன் பிடிக்க தடை விதிக்கப்படும். இதன் படி தற்போது தமிழகத்தில் மீன் பிடிக்க தடை விதிக்கப் பட்டு உள்ளது.

இதனால் நீல கிரி மாவட்டத்தின் தேவை, அண்டை மாநிலமானகேரளா வில் இருந்து கொண்டு வரப்படும் மீன்கள் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

<u>மீன்கள் விலை உயர்வு</u>

தற்போது மீன்பிடிக்க தடை என்பதால், மார்க்கெட்டு களுக்கு மீன்வரத்து குறைந்து உள்ளது. இதனால் மீன்கள் விலை 2 மடங்காக உயர்ந்து உள்ளது. ஊட்டியில் நேற்று விற்பனை செய்யப்பட்ட மீன் களின் விலை விவரம் வருமாறு:–

வஞ்சிரம் மீன் கிலோ ரூ.700, ஊழி மீன் கிலோ ரூ.350, கருப்பு வாவல் கிலோ ரூ.700, அயிலை மீன் கிலோ ரூ.200, நெத்திலி மீன் கிலோ 240, பாறை மீன் கிலோ ரூ.400, நெய் மீன் கிலோ ரூ.180, நண்டு கிலோ ரூ.280, இறால் மீன் கிலோ ரூ.450, மத்தி மீன் கிலோ ரூ.100–க்கும் விற்பனையானது.

<u>அணை மீன்கள் விற்பனை அதிகரிப்பு</u>

ஊட்டியில் உள்ள பைக்காரா, எமரால்டு உள்ளிட்ட அணைகளில் இருந்து பிடிக்கப்படும் மீன்களை விட மேட்டூர், பவானி சாகர்அணை களில் இருந்து பிடிக்கப்படும் மீன்களையே நீலகிரி மாவட்ட மக்கள் பெரும்பாலும் விரும்பி சாப்பிடுகிறார்கள்.

இதனால் ஊட்டி மார்க் கெட்டில் கட்லா, ரோகு, ஜிலேபி ஆகிய மீன்களின் விற்பனை அதிகரித்து உள்ளது.

இதேபோல் ஓட்டல்களுக் கும் அணை மீன்கள் அதிக அளவில் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

இந்த மீன்கள்கிலோ ரூ.150 முதல் ரூ.180 வரை விற்பனையாகிறது. அணை மீன்கள் அனைத்து தரப்பு மக்களும் வாங்கும் விலைக்கு விற் கப்படுவதாலும், அணைகளில் பிடிக்கப்பட்டு, மறுநாளே விற்பனைக்கு கொண்டு வரப்படுவ தாலும் அணை மீன்களின் விற்பனை அதிகரித்து வருகிறது.

இதனால் ஊட்டியில்நாள் தோறும் 500 கிலோ வரை அணை மீன்கள் விற்பனையாவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**<u>மீன்பிடி தடைக்காலம் எதிரொலி நாட்டு மீன்கள் விலை உயர்வு</u>**



நாகையில் மீன்பிடி தடைக்காலம் எதிரொலியால் நாட்டு மீன்களின் விலை அதிகரித்துள்ளது.

<u>மீன்பிடிதடைக்காலம்</u>

நாகையில் வெளிப்பாளையம் பாரதி மீன் மார்க்கெட், பெரிய கடைத்தெருவில் ஆசாத் மீன் மார்க்கெட், நாகூரில் தர்கா மீன் மார்க்கெட் ஆகிய மீன்மார்க்கெட்டுகள் உள்ளன. இங்கு 100-க்கும் மேற்பட்ட கடைகள் இயங்கி வருகின்றன. இந்த கடைகளுக்கு நாகை நம்பியார் நகர், கீச்சாங்குப்பம், அக்கரைப்பேட்டை, கல்லாறு, நாகூர், சாமந்தான்பேட்டை, பட்டினச்சேரி ஆகிய பகுதிகளில் இருந்து மீன்கள் விற்பனைக்கு வருகின்றன. இங்குள்ள மீன்கள் கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிலையில் கடலில் மீன்வளத்தை பாதுகாக்கும் நோக்குடன் கடந்த ஏப்ரல் 15-ந் தேதி முதல் வருகிற 29-ந் தேதி வரை 45 நாட்கள் விசைப்படகுகள் மற்றும் இழுவை படகுகள் மூலம் மீன்பிடிக்க செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தமிழக அரசு இந்த தடைக்காலத்தில் பைபர் படகுகளில் மட்டும் குறிப்பிட்ட தூரம் வரை சென்று மீன்பிடித்து வரலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீன்பிடி தடைக்காலத்தினால் கடல்மீன்களின் வரத்து குறைவாக உள்ளது. ஆதலால் கேரளா மாநிலத்தில் இருந்து கடல் மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டு, நாகையில் உள்ள மீன் மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யப்படுகிறது.

<u>விலை அதிகரிப்பு</u>

இதனால் நாகை மீனவர்கள் பைபர் படகுகள் மூலம் சென்று மத்தி, கோலா, கானாங்கெளுத்தி உள்ளிட்ட சிறிய வகை மீன்களை பிடித்து வருகின்றனர். மீன்பிடி தடைக்காலத்தினால் மீன்களின் வரத்து குறைவாக உள்ளது. இதனால் மீன்களின் விலை அதிகமாக விற்கப்படுகிறது.

சிறிய கானாங்கெளுத்தி ஒரு மீன் ரூ.5 முதல் 10 வரையும், சிறிய நண்டுகள் (எண்ணிக்கை 6) ரூ.30 முதல் ரூ.35 வரையும், நாட்டு மீன்கள் கிலோ ரூ.75 முதல் 100 வரையும் விற்பனை செய்யப்படுவது வழக்கம். மீன்பிடி தடைக்காலத்தின் மீன்களின் வரத்து குறைவாக இருப்பதால் தற்போது சிறிய கானாங்கெளுத்தி 1 மீன் ரூ.30-க்கும், சிறிய நண்டுகள் (எண்ணிக்கை 6) ரூ.50-க்கும், கெண்டை, ஜிலேபி, விலாங்கு உள்பட நாட்டு மீன்களின் விலை ரூ.120 முதல் ரூ.150 வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன. மீன்களின் விலை ஏற்றத்தால் மீன் வாங்க வருவோரின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே உள்ளன.

**<u>சொட்டுநீர் பாசனம் மூலம் வெங்காயம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்</u>**



கள்ளக்குறிச்சி பகுதியில் சொட்டுநீர் பாசனம் மூலம் வெங்காயம் பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>சொட்டுநீர் மூலம் வெங்காயம்</u>

தமிழகத்தில் கடந்த ஒரு வருடமாக பருவ மழை சரியாக பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் விவசாய கிணறு களில் தண்ணீர் குறைந் துள்ளது. கள்ளக்குறிச்சி பகுதியில் தண்ணீர் பிரச்சினையால் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் கவலை அடைந் துள்ளனர். சில விவசாயிகள் தண்ணீர் பிரச்சினையை சமாளிக்க சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயம் செய்யும் யுக்தியை கையாண்டு வருகின்றனர். இதன் மூலம் சின்ன வெங்காயம், மரவள்ளி, கரும்பு, காய்கறி வகைகள் ஆகிய பயிர்கள் செய்து வருகின்றனர். கள்ளக்குறிச்சி மலைக்கோட் டாலம் உள் ளிட்ட பகுதிகளில் சொட்டுநீர் பாசனம் மூலம் அதிக அளவில் சின்ன வெங் காயம் பயிர் செய்துள்ளனர்.

விவசாயிகள் ஆர்வம்

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறும்போது, பிப்ரவரி மாதம் வயலில் வெங்காயம் நடவு செய்தோம். இன்னும் 20 நாட்களில் அறுவடை செய்ய தயார் நிலையில் உள்ளது. சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயம் செய்வதால் சாதாரணமாக ஒரு ஏக்கர் பாய்ச்சக்கூடிய தண்ணீர் மூலம் மூன்று ஏக்கர் பயிர் செய்யலாம். எனவே இப் பகுதியில் விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையை கையாண்டு வருகின்றனர் என்றார்.

**மொந்தன் வாழைத்தார் விலை குறைந்தது ரூ.400–க்கு விற்பனை**



**நொய்யல்,**

கடந்த வாரம் ரூ.600–க்கு விற்பனையான மொந் தன் வாழைத்தார், நேற்று விலை குறைந்த தால் ரூ.400–க்கு விற்பனை யானது.

விற்பனை

கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, என்.புகழூர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்கள் உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வியாபாரி களுக்கும் விற்பனை செய்யப் படுகிறது. சில வியாபாரிகள் வாழைத் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து கொள்கிறார்கள். பின்னர் வாழைத்தாரை வியாபாரிகள் லாரிகள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு, கோவை நாமக் கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

கடந்த வார விலை

கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார் ரூ.400–க்கும், ரஸ்தாளி வாழைத்தார் ரூ.300–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.275–க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.350–க்கும், மொந்தன் வாழைத்தார் ரூ.600–க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென் றனர்.

மொந்தன் வாழைத்தார் விலை குறைந்தது

நேற்று பூவன் வழைத்தார் ரூ.300–க்கும், ரஸ்தாளி வாழைத்தார் ரூ.350–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.325–க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ. 300–க்கும், மொந்தன் வாழைத்தார் ரூ.400–க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். தற்போது முகூர்த்தங்கள், கும்பாபி ஷேகங்கள் இல்லாததால் மொந்தன் வாழைத்தார் விலை குறைந்து உள்ளது.

மேலும் வாழைத்தார் இறக்குமதி அதிகரித்ததாலும், அவற்றை வாங்கி செல்ல வியாபாரிகள் அதிக அளவு வராததாலும், கடந்த வாரம் ரூ.600–க்கு

விற்பனையான மொந்தன் வாழைத்தார், நேற்று விலை குறைந்து ரூ.400–க்கு விற்பனையானது. கடந்த வாரத்தைவிட இந்த வாரம் ரூ.200 விலை குறைந்து விட்டது. இதனால் விவசாயி கள் பெரும் கவலைக்கு உள்ளானார்கள்.

**<u>முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த அளவீடு பணிகள் நிறைவு</u>**



**கூடலூர்,**

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த அளவு குறியீடு பணிகள் முடிந்துள்ளன. அடுத்தகட்டமாக சுப்ரீம்கோர்ட்டு தீர்ப்பின் படி, 3 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு விரைந்து நியமிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

முல்லைப் பெரியாறு அணை தொடர்பான வழக் கில் சுப்ரீம் கோர்ட்டு கடந்த 7-ந்தேதி தீர்ப்பு வழங்கியது. அதில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்திக்கொள்ளலாம் என்று நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினார்கள்.

இந்த தீர்ப்பை தொடர்ந்து முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள முதல்- அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்பேரில் தமிழக பொதுப்பணித்துறை

அதிகாரிகள் கடந்த 8-ந் தேதி முதல் அணையில் பராமரிப்பு பணிகளை தொடங்கினர். குறிப்பாக அணை மதகு பகுதியில் வர்ணம் பூசுதல் மற்றும் 142 அடிக்கு அணை நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் மதகை எந்த அளவில் நிலை நிறுத்த வேண்டும் போன்ற அளவு குறியீடு செய்யும் பணிகளையும் தமிழக பொதுப்பணித்துறை பணியாளர்கள் முழுவீச்சில் செய்து முடித்துள்ளனர்.

3 பேர் குழு

இதனை அடுத்து அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த அடுத்த கட்ட நடவடிக்கைகளை தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதுதொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பில், அணையில் நீரின் மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதில் கேரளாவுக்கு இருக்கும் அச்சத்தை தவிர்க்கும் வகையில், அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தும் பணியை கண்காணிக்க 3 உறுப்பினர்களை கொண்ட கண்காணிப்பு குழு நியமிக்கப்படும் என்று கூறி இருந்தது. இந்த குழுவில் மத்திய நீர்வள ஆணையத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியும், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களின் சார்பில் தலா ஒரு பிரதிநிதியும் இடம் பெறுவார்கள். இந்த கண்காணிப்பு குழுவின் அலுவலகம் கேரளாவில் இருக்கும். இந்த குழுவுக்கான அனைத்து செலவுகளையும் தமிழக அரசு ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டு இருந்தது.

இறுதி முடிவு

தற்போதைய நிலையில் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி, புதிய குழு அமைக்கும் பணியை புதிதாக பொறுப்பேற்கும் மத்திய அரசு தான் அமைக்க வேண்டும். எனவே மத்திய அரசு அமைந்தவுடன், இந்த குழுவை அமைக்க விரைந்து வலியுறுத்தி, அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தமிழக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் இந்த குழு அமைக்கப்பட்ட பின்னர் தான் அணை நீர்மட்டத்தை 142 அடியாக நிலை நிறுத்த மதகுகளை ஆட்கள் இயக்கும் வகையில் அமைப்பதா? பொத்தான் அழுத்தி இயக்கும் வகையில் நவீனமுறையில் அமைப்பதா? என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**45 நாள் தடைக்காலத்துக்கு பிறகு கடலுக்கு செல்ல தயாராகி வரும் மீனவர்கள்**



ராமேசுவரம் பகுதி மீன வர்கள் 45 நாள் தடைக் காலத்துக்கு பிறகு மீண் டும் கடலுக்கு செல்ல தயாராகி வருகின்றனர்.

தடைக்காலம்

தமிழகத்தில் மீன் வளத்தை காக்கவும், மீன்கள் இனப் பெருக்கம் செய்யும் வகையி லும் விசைப்படகுகள் 45 நாட்கள் கடலுக்கு செல்ல அரசு தடை விதித்துள்ளது. இதன்படி ராமேசுவரம் பகு தியில் சுமார் 800க்கும் மேற் பட்ட விசைப்படகுகள் கட லுக்கு செல்லவில்லை. இந்த காலகட்டத்தை பயன்படுத்தி விசைப்படகு உரிமையாளர் கள் தங்கள் படகுகளை பழுது நீக்கி பராமரிக்கும் பணியில் ஈடுபட்டனர். இதையடுத்து விசைப்படகுகள் கரைக்கு கொண்டு வரப்பட்டு புதுப்பிக் கும் பணிகள் தீவிரமாக நடை பெற்று வருகிறது.

தடைக்காலம் முடிவடைய இன்னும் 14 நாட்களே உள்ள நிலையில் மீனவர்கள் மீன் பிடிப்புக்கு தயாராகி வருகின் றனர். வலைகளை சரி செய் தும், அவற்றில் இரும்பு சங்கி லிகளை கோர்க்கும் பணியி லும் மீனவர்கள் தீவிரமாக ஈடு பட்டுள்ளனர். மேலும் வெளி மாவட்டங்களில் இருந்து புதிய படகுகள் வாங்கி வரப் பட்டு ராமேசுவரம் கடற்கரை யில் நிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்பார்ப்பு

இதுபற்றி மீனவர்கள் கூறிய தாவது:- தடைக்காலம் முடிய இன்னும் 14நாட்கள் உள்ளன. இந்த 45 நாளில் மீன்கள் பெருகியிருக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

நாங்கள் மீன் பிடிக்க செல்லும் போது இலங்கை கடற்படையால் எந்த பிரச்சினையும் வரக் கூடாது என்று கடவுளை வேண்டி வருகிறோம். கடந்த ஆண்டு தடைக்காலம் முடிந்து கடலுக்கு சென்ற போது இரால் மீன்கள் அதிகள வில் கிடைத்தது. இதே போல இந்த ஆண்டும் இரால் உள் ளிட்ட மீன்கள் அதிகள வில் கிடைக் கும் என்று எதிர்பார்க்கி றோம். இவ்வாறு அவர் கூறி னார்.

**<u>பண்ணைக்குட்டைகள் மூலம் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள்</u>**



**ஆர்.எஸ்.மங்கலம்,**

பண்ணைக்குட்டைகள் மூலம் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய் யும் பணியில்விவசா யிகள் ஈடுபட்டு வரு கின்றனர்.

<u>அறிவுரை</u>

ராமநாதபுரம் மாவட்டத்தில் பெய்த கோடை மழையினால் பண்ணைக்குட்டைகள் மழை நீரினால் நிரம்பியது தொடர் பாக மாவட்ட கலெக்டர் அறிவுரையின்படி மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் திட்ட அலுவ லரும், வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் வேளாண்மை துணை இயக்குனர் கமால்தீன் உதவி என்ஜினீயர் குமரேசன் ஆகியோர் ஆர்.எஸ்.மங்கலம், நயினார்கோவில், கடலாடி மற்றும் முதுகுளத்தூர் ஆகிய வட்டாரங்களில் அமைக்கப் பட்டுள்ள பண்ணைக் குட்டை களை பார்வையிட் டனர்.

கோடை மழையினால் சுமார் 400 பண்ணைக் குட்டைகளில் நீர் நிரம்பி உள்ளது. ராமநாதபுரம் மாவட் டம் மிக குறைவான மழை பெறும் பகுதியாக உள்ள தாலும், நீர்வள மேம்பாட்டு பணிகள் மிகவும் அத்தியா வசியமானது என்பதாலும் மாவட்ட கலெக்டரின் சீரிய முயற்சியினால் 2013-14ம் ஆண்டு ராமநாதபுரம் மாவட் டத்தில் அதிக அளவில் பண்ணைக் குட்டைகள் அமைத்து சாதனை செய்யப் பட்டுள்ளது.

நீர்வடிப்பகுதி

ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டத் தின்கீழ் ராமநாதபுரம் மாவட் டத்தில் இதுவரை 1,851 பண்ணைக்குட்டைகள் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 1,644 பண்ணைக்குட்டைகள் பணிகள் முடிக்கப்பட்டு அதன்மூலம் தற்போது விவசாயிகள் மிளகாய், பருத்தி மற்றும் சிறுதானிய பயிர் வகைகளை பயிரிட்டு பயன் பெற்று வருகின்றனர். பருவ மழையினை மட்டுமே சார்ந்து விவசாயப்பணிகள் மேற் கொள்ள வேண்டிய நிலையில் உள்ள ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு பண்ணைக் குட்டைகள் ஒரு வரப் பிரசா தமாக விளங்குகிறது.

பண்ணைக்குட்டைகளில் மழைநீர் சேகரிக்கப்படுவதால் விவசாயிகள் தங்களுடைய மானவாரி நிலங்களில் மிள காய் மற்றும் பருத்தி போன்ற பணப்பயிர்களை பயிரிட்டு பயன்பெற்றுவருகின் றனர். மேலும் தற்போது ராம நாத புரம் மாவட்டத்தில் பெய்த கோடை மழையினால் பெரும் பாலான பண்ணைக் குட்டை களில் மழை நீர் நிரம்பியுள் ளதால் விவசாயிகள் தங்கள் பண்ணைக் குட்டை களில் மீன்குஞ்சுகள் வளர்ப் பதற்கு ஆர்வம் காட்டு கிறார்கள்.

விவசாயிகளின் விருப்பத் திற்கு ஏற்ப பண் ணைக்குட்டை களில் மாவட்ட கலெக்டர் உத்தர வின் பேரில் மீன் வளர்ச்சித்துறை மூலம் மீன் குஞ்சுகள் வளர்ப்பதற்கு வழிவகை செய்யப் பட்டுள் ளது.

மகிழ்ச்சி

மேலும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் மூலம் நிலமற்ற விவசாய கூலித் தொழி லாளர்களின் வாழ்வா தாரத் தினை மேம்படுத்தும் வகையில் சுய உதவி குழுக்கள் அமைக் கப்பட்டு ஒரு சுய உதவி குழுவுக்கு ரூ.24

ஆயிரம் வட்டி யில்லா கடன் வழங்கப் படுகிறது. வேளாண் பண்ணை உற்பத்தி திட்டத்தின் மூலம் பழமரக்கன்றுகள் நடுதல், அரசு புறம்போக்கு நிலத்தில் மரக்கன்றுகள் நடவு செய்து சமுதாயக்காடுகள் உருவாக் கும் பணிகளும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

ராம நாதபுரம் மாவட்டத்தில் அண்மையில் பெய்த கோடை மழை மூலம் பண்ணைக் குட்டைகளில் சேகரிக்கப் பட்டுள்ள நீரைக்கொண்டு இதுநாள் வரையிலும் மானா வரி நிலமாக இருந்த தங்களது விவசாய நிலங்களில் மிளகாய், பருத்தி, நிலக்கடலை மற்றும் சிறுதானிய பயிர்வகைகளை சாகுபடி செய்ய தயார் நிலையில் உள்ளதாக விவசா யிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித் துள்ளனர்.

**<u>விவசாயிகளுக்கு கடன் அட்டை</u>**



தூத்துக்குடி மாவட்டம் பசுவந்தனை அருகே உள்ள பொம்மையாபுரம் கிராமத்தில் பாண்டியன் கிராம வங்கி பசுவந்தனை கிளை மற்றும் நபார்டு வங்கி இணைந்து ஓட்டப்பிடாரம் வட்டார விவசாய விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு விவசாய கடன் அட்டை வழங்கும் விழா நடத்தியது. பாண்டியன் கிராம வங்கியின் தூத்துக்குடி மண்டல மேலாளர் சுப்பையா வரவேற்றார். தமிழ்நாடு மண்டல நபார்டு வங்கியின் தலைமை பொது மேலாளர் வெங்கடேஷ்வரராவ், விவசாயிகளுக்கு கடன் அட்டைகளை வழங்கினார். 198 பயனாளிகளுக்கு ரூ.1.46 கோடி விவசாய கடன் வழங்கப்பட்டது.

விழாவில் பாண்டியன் கிராம வங்கி தலைவர் கார்த்திகேயன், நபார்டு வங்கியின் தூத்துக்குடி மாவட்ட உதவி பொது மேலாளர் நடராஜன், பாண்டியன் கிராம வங்கி பொது மேலாளர் இராமசுப்பு, வேளாண்மை உதவி இயக்குனர் வேல்குமார், ஓட்டப்பிடாரம் வட்டார விவசாய விளை பொருள் உற்பத்தியாளர் கூட்டமைப்பு தலைவர் ராகவன், பலர் கலந்துகொண்டனர். வங்கி பசுவந்தனை கிளை மேலாளர் வேல்சாமி நன்றி கூறினார்.

தி இந்து

தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**குன்னூர் பழக் கண்காட்சியில் பார்வையாளர்களை கவர்ந்த திசு வாழை**



திசு வாழை

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நடைபெற்ற பழக் கண்காட்சியில் நீலகிரிக்கே உரித்தான மருத்துவ குணங்கள் நிறைந்த பழங்கள், திசு வாழை ஆகியவை

காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவற்றை சுற்றுலாப் பயணிகள் பார்த்து வியப்படைந்தனர்.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 56-வது பழக் கண்காட்சி சனி, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் அரசு தோட்டக்கலைத் துறை மற்றும் தனியார் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

பழக் கண்காட்சியில் நீலகிரிக்கே உரித்தான மருத்துவ குணங்கள் நிறைந்த பழங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. குன்னூரைச் சேர்ந்த கோபி என்பவர் நீலகிரியில் விளையும் அரிய வகைப் பழங்களை காட்சிக்கு வைத்திருந்தார்.

**நோய்களுக்கு நிவாரணி**

நான்கு அடி உயரம் மட்டுமே வளரும் மலை வாழை, காட்டு வேடன், வெள்ளரி, பன்னீர் கொய்யா, கலா, நகா, புணுகு, அத்தி, குரங்குப் பழம், ஆசீர்வாத் ஊசி, தவுட்டு, விழாத்திப் பழம், விக்கிப் பழம், பஞ்ச பாண்டவர், ஆப்பிள் நெல்லி, ரம்பூட்டான், துரியன் ஆகிய பழங்கள் சுவையாக இருப்பதோடு பல்வேறு மருத்துவ குணங்களையும் கொண்டவை. சர்க்கரை நோய், ரத்தக் கொதிப்பு, வயிற்று உபாதைகளுக்கு இந்த பழங்கள் நிவாரணியாக விளங்குகின்றன.

இந்த பழங்களின் பெயரை கேட்டு ஆச்சரியம் அடைந்த சுற்றுலாப் பயணிகள் அவற்றின் தோற்றத்தையும் கண்டு வியந்தனர். இந்த பழங்களின் தோற்றத்தைக் கண்டு சாப்பிடத் தயங்கிய சுற்றுலாப் பயணிகள் அவற்றின் சுவையை உணர்ந்தவுடன் அதிக அளவில் வாங்கிச் சென்றனர்.

இதேபோன்று 2 கிலோ எடை கொண்ட கொய்யா மாதுளை, விதையில்லா திராட்சை ஆகிய பழங்கள் பார்வையாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

**திசு வாழை**

தர்மபுரி, சேலம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, வேலூர், தேனி, திருநெல்வேலி, மதுரை உள்பட 9 தோட்டக்கலை மாவட்டங்கள் சார் பில் பல்வேறு வகையான பழங்கள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன.

தேனி மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில், விவசாயி பால முருகன் என்பவர் பயிரிட்ட திசு வாழையை காட்சிப்படுத்தியிருத் தனர். இந்த வாழை சுற்றுலாப் பயணி களை வெகுவாகக் கவர்ந்தது.

ஒரு ஹெக்டரில் 165 டன் வாழையை திசு வளர்ப்பு மூலம் பாலமுருகன் மகசூல் செய்து சாதனை படைத்துள்ளார். இவரது சாதனையைப் பாராட்டி பஞ்சாப் மாநில அரசு ரூ. 50 ஆயிரம் ரொக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்த வாழைகளை சுற்றுலாப் பயணிகள் வியப்புடன் பார்த்து ரசித்தனர்.